040



உ

கிரகசார நிலையைக்கண்டு

பிறந்த இடத்தின் நிலைமையைக்கண்டறிய

சுந்தரானந்தரீலருளிச்செய்த

# கந்தாரூடம் 300.

இவை முசிரி தாலூகா, நகர்வாழையூரிலிருக்கும்

வீரசைவசிகாமணி ஜோசியம்

நீலகண்ட அய்யாவர்களிடமிருந்த

ஏட்டுப்பிரதியைக்கொண்டும்,

திரிசிரபுரம்,

சின்னகடைத்தெருவு, ஜோசியம்

**நா. ரெங்கசாமி கோனார்**

அவர்களிடமிருந்த ஏட்டுப்பிரதியைக்கொண்டும்,

ஷையாரால் பிழையறப் பரிசோதிக்கப்பட்டு

திரிசிரபுரம்

புஸ்தக வியாபாரம்

தி. சபாபதிபிள்ளை மருமகர்

**தா. பொன்னுசாமி பிள்ளை**

அவர்களால்

திருச்சி, ஸ்ரீநிலையம் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

1935

சப்ததது] [அணா 0-8-0

O26:417
N35
141896



உ

வேலுமயிலுந்துணை.

# கந்தராரூடம்.

விநாயகர் காப்பு.

அரனைவலம்வந்து அருங்கனியைதான்வாங்கும்
கரிமுகவன்றாளிணையே காப்பு.

அரனருள்புதல்வன்செந்தூர் அறுமுகன்வாக்கினாலே
உருமையாயுரைத்தநூலோ ராயிரத்தறுநூறென்னும்
பெருமைசேர்பொருளையானும் புவிதனில்மேவுதற்கு
கரிமுகன்தொந்திமுக்கண் கணபதிகாப்புத்தானே.

## ஆக்ஷி உச்சம் - பகை நீசம் - அரிவது.

### சூரியன்.

சிங்கமும்ஆக்ஷியாகுஞ் செரிமயிர்மேடமுச்சம்
பங்கமில்துலாந்தான்நீசம் பருத்தவில்மீனம்நட்பு
தங்குமேழ்மற்றராசி தானுமேபகையதென்று
செங்கதிரவருக்கேதான் செப்பினர்குமரர்தானே. (1)

### சந்திரன்.

கடசமும் ஆக்ஷியாகும் கருதியஇடபம்உச்சம்
விடமுருதேளுநீசம் மிதுனம்பெண்தனுமீனநட்பு
அடல்பெருமற்றராசி ஐந்துமேபகையதென்று
சுடர்மிகுசந்திரர்க்கு சொல்லினர்குமரர்தானே. (2)

### செவ்வாய்.

மேடமுந்தேளுமாக்ஷி விளம்பியமகரமுச்சம்
நாடியநண்டுநீசம் நாரியரெட்டைகோலும்
விடையதுநட்பதாகும் மீதியாம்ராசிநான்கும்
அடர்பகைசெவ்வாய்க்கென்று அரைந்தனர்குமரர்தானே. (3)

### புதன்.

மிதுனமுங்கன்னியாக்ஷி மேற்சொன்னகன்னியுச்சம்
நதிபெருமீனநீசம் நண்டெருதாடுதேளு
விதிதுலாம்மகரம்நட்பு மீந்ததோர்ராசிநான்கும்
முதிர்பகைபுந்திக்கென்று மொழிந்தனர்குமரர்தானே. (4)

### வியாழம்.

தனுசுடன்மீனம்ஆக்ஷி தன்மையாம்கடகமுச்சம்
வினவியமகரநீசம் மிதுனமெருதுசிங்கமுடன்
கனிதுலாம்கும்பமுடன் கருதுநட்பாம்மற்றிரண்டும்
நனிசேர்பகையாம்குருவினுக்கு நாட்டினர்குமரர்தானே. (5)

### வெள்ளி.

இடபமும்துலாமுமாக்ஷி இனியமீனம்உச்சமதாம்
துடருங்கன்னிநீசமதாம் துய்யமேடம்மிதுனந்தேள்
அடருந்தனுசுமகரகும்பம் ஆகும்நட்பாம்மற்றிரண்டும்
விடஞ்சேர்பகையாஞ்சுக்கிரற்கு விளம்பினர்குமரர்தானே. (6)

## சனி.

மகரமுங்கும்பமாக்ஷி மருவியதுலாந்தான்உச்சம்
தகரதுநீசமாகும் தாவியஇடபம்நண்டு
மிருகன்னிதனுசுமீனம் மிகுநட்பாம்மீதிமூன்றும்
பகையாமென்றுசனிதனக்கு பகர்ந்தனர்குமரர்தானே. (7)

## ராகு.

கும்பமும்ஆக்ஷியாகும் கூருந்தேள்உச்சமாகும்
வம்புருஇடபம்நீசம் மகரந்தனுசுதுலாங்கன்னி
அம்புமீனம்மிதுனங்கள் அயலாம்மூன்றும்நட்பாகும்
பம்புபகையாம்ராகுக்கே பகர்ந்தனர்குமரர்தானே. (8)

## கேது.

மீனமும்ஆக்ஷியாகும் மிதுனமும்உச்சமாகும்
தனுசதுநீசமாகும் தாவுமிடபமகரகும்பம்
நனிதுலாம்கன்னிநட்பாம் நவிலாதராசியெல்லாம்
வினவும்பகையாம்கேதுக்கே விபரமாய்குமரர்சொன்னார். (9)

Q26:412 ARS 94 133.5

தரிக்காலென்னும் கிரகநட்சத்திரக்கால்களில் சந்திரன் இராசி,

## வேறு.

அசுபதி பரணியுடன் கார்த்திகை ஆகுங்காலதுகொண்டதுமேஷமாம், முசியங்கார்த்திகைமுக்காலும் ரோகணி மிருகசீரிடம்முன்னரைகாளேயாம், பிசியமான்றலேபின்னரைஆதிரை மீண்டபுனர்தம் முக்கால்மிதுனமாம், பொசிபும்பிண்டிக்கால்பூசமோடாயில்யம் போதகொண்டது கற்கடகமே. (10)

புகழுவே மகரம்பூரம் பங்குனிக்கால் போதக்கொண்டதுவேயது சிம்மமாம், திகழும்உத்திரம்முக்காலுடனஸ்தமும் சேருஞ்சித்திரை முன்னரைகன்னியாம், மகிழுஞ்சித்திரை பின்னரை சுவாதியும் வன்மையான விசாகம்முக்கால்துலாம், நிகழும்வேதவிசாகங் காலனுஷமும் கேதுங்கேட்டையுங்கொண்டதுதேளதே. (11)

கொண்டமூலம் பூராடம் உத்திராடக்கால் கோலமுள்ள தனுசதுவானது பன்றிலங்கு உத்திராடமுக்காலுமாம் பண்மைசோணே பரவையன்முன்னரை, மண்டுமாங்கலே அவிட்டத்தின் பின்னரை மருவுசெக்கைபூரட்டைமுக்காலுமே, முன்னுமாங்குடன் நாளியின் காலுடன்முரசுரேவதிகொண்டதுமீனமே. (12)

## நூல்.

முந்தியபூகோளத்தில் மொழிந்தனன்முறையைப்பார்த்து
பிந்தியஆரூடத்தை பேசிடஅகஸ்தியாகேள்
சந்ததம்ஆரூடத்தை தன்னையும்நன்றாய்ப்பார்த்து
தந்திரயுத்தியாலே சாற்றலாம்உலகுள்ளோர்க்கே. (13)

வந்தவனின்றராசி உதையநாழிகையின்ராசி
அந்தமில்கவிப்பின்ராசி அப்பொழுதுற்றகோட்கள்
சொந்தமாமிவைகள்போட்டு சுகமுடனறிந்துதானும்
இந்தநல்நன்மைதீமை கூரசிந்தனைகள்சொல்லே. (14)

மனைபலன்கேட்கவென்று வந்தநாளிகையின்ராசி
தனைஇலக்கணமாய்வைத்து சார்ந்திடும்கோட்கள்தம்மை
தினகரன்முதலினோர்கள் செரிகேந்திரதிரிகோணங்கள்
கனநட்புஉச்சம்ஆக்ஷி கண்டுநீபலனைச்சொல்லே. (15)

சொல்வதுகண்டம்நாலில் சூழ்ந்திடும்கோள்கள்கொண்டு
வெல்வதும்பகையும்பார்த்து மேவியஆரூடத்தை
பலபலவிதத்தைப்பார்த்து பாண்மையாய்அவர்குணத்தை
ஒல்லையில்அகஸ்தியாநீ உரைத்திடுஉலகினற்கே. (16)

சூரியன்செவ்வாய்புந்தி துடர்ந்திடமைந்தன்கூடி
பேரியலக்கனத்தில்கேந்திரம் யேறிட்டாலும்
பேரியமனைக்கிருத்தம் பேசவொண்ணாதுகண்டாய்
பாரியமனைவலுக்கும் மக்களும்செல்வமுண்டாம். (17)

சுக்கிரன்பகைவன்வீட்டில் சூழ்கினும்மற்றகோட்கள்
சக்கரமதனில்கேந்திரம் தானுறில்மனைக்கிருத்தம்
பக்குவகன்னிநீசம் பற்றிடில்படர்மனைக்குச்
சிக்கெனத்துக்கமாகி சிதறிடும்பலன்களெல்லாம். (18)

கொள்ளுவரெவருமிந்த கோள்களின் நிலையைப்பார்த்து
வல்லவருரைக்குமிந்த உச்சநட்பாச்சிபார்த்து
தெள்ளியபகைசஷ்டாட்டம் சேர்க்கவேயிவைமுன்பார்த்து
வல்லவனானகந்தன் வழுத்தினநூலைப்பாரே. (19)

## வீதிகளறிய.

நின்றதோர்மேடந்தன்னில் நிலைபெறநின்றவற்கு
கொண்டிடும்கிழக்குமேற்கு கோதிலாவீதியாகும்
சென்றதோரிடபமாகில் சேர்ந்திடும்வடக்குத்தெற்கு
தென்றிருமிதுனமாகில் சீர்பெருமூலைதானே. (20)

மூலையாயிருந்தவீட்டை மும்மூன்ருய்பிரித்துக்கொள்ளு
நாலிடம்தன்னைப்பார்த்து நலமுள்ளவீட்டைச்சொல்லு
பாலகன்இருக்கும்திக்கும் பணிவிடைகாரியமெல்லாம்
சேல்விழியாளேகந்தன் செப்பியநூலின்தானே. (21)

பொன்னவன்சுங்கன் இரண்டுமேகூடிபொருந்திய கோணகேந்திரத்
அன்னவன்றனக்குவியத்தினில்லாபத்தினில்குருசுங்கனிருக்க [தில்
பின்னையேயுரைத்தபலனெலாம் புகலாய்பெற்றதுவீதியுங்கிழமேல்
நன்னயகுணமும்செல்வமுமுள்ள நன்மனைதென்புறமென்றே (22)

பொன்னவன்சசியும்சுங்கனும் சனியும்பொருந்திஏழாமிடமிரண்டில்
அன்னவர்தனக்குகிரகங்கள்வலுத்தால் அவனியில்யோகம்சம்பத்து
பின்னமொன்றில்லாதென்வடல் வீதிபெருகியமேல்புறங்காலி
அன்னவர்மனைக்குகீழ்புறங்கேணி அற்பபுத்திரனென அறையே(23)

அனுமரணந்தான்இரண்டுமூன்ருறில் அம்புலிஅரிகுசனிருக்க
மனுவெனும்பொன்னேன்பெலத்திட கிரகங்கள்கேந்திரமேற
நனிமிகும்வீதிபூருவங்கிழமேல் நாட்டியவடபுறகேணி
பனிமொழித்தாரம்இரண்டினில் சனியும்பலித்திடகறுப்புத்தேவ

ஒவ்வொருகோள்தனக்கு உரைத்திடும்பலனைக்கேளு [தையே
செவ்வியரவியினலே செட்டுலாபங்கள்சொல்லு
வெவ்வியச்சசியினலே விருக்ஷமும் நஞ்சையும் சொல்லு
தவ்வியசெவ்வாயாலே சாற்றினேம்பூமியெல்லாம் (25)

சூரியனலேவீதி சுக்கிரனலேபெண்கள்
காரியினலேவிருத்தி கனகனல்தனங்கள்சொல்லு
பூரிக்கும்புதனல்யோகம் பூமியும்செவ்வாயாலே
வாரியால்நஞ்சைபுஞ்சை மதியினல்அறிந்துசொல்லே. (26)

பொருந்தியராகுவாலே புஷ்பவதிவளப்பம்சொல்லு
திருந்தியகேதுவாலே சீவனத்தொழில்கள்சொல்லு
அரிந்ததைப்பலன்களெல்லாம் அவரவர்தனக்குத்தானும்
பொருந்தவேகந்தர்சொன்ன போதநூல்அறிந்துபாரே. (27)

புத்திக்குப்பொசிப்பதாகும் புகர்பெரும்அடுக்குலக்கை
வந்திடும்மன்னனுக்கு மக்கள்பூஷணங்கள்மெத்தை
சந்திரசுங்கனுக்கு சுகமங்கைசோரம்சொல்லு
வந்திடும்சனிக்குத்தானே மண்ணுமேமரங்கள்சொல்லு (28)

ஆமெனும்ராகுவாலே இரும்புபித்தளைகள்சொல்லு
தாமெனும்கேதுவாலே குருதுகள்கதவுசொல்லு
வாமசூரியன்முதலாய் வாழ்த்தினேம்பலன்றப்பாமல்
ஆமெனும்பலனவனுக்கன்புட னுரைத்தார்கந்தர். (29)

காணலாம்ராகுவாலே கல்லுகளறிந்துசொல்லு
காணலாம்கேதுவாலே கரியுமிளலும்புசொல்லு
காணலாம்ரவியினலே காட்டிடுஅடுப்புசொல்லு
காணலாம்சுங்கனலே களத்திரம்சேரச்சொல்லே. (30)

சொல்லவேஆரூடத்தில் சுகமுடன்கிரகம்பார்த்து
வல்லவர்ஆட்சிஉச்சம் பகைநட்புநீசம்பார்த்து
சொல்லியமொழியைக்கண்டு சுகமுடன்ராசிபார்த்து
வல்லவர்கந்தர்சொன்ன வாக்கைநீபொருந்திச்சொல்லே. (31)

மனையதுபார்க்கும்போது வாகுள்ளராசிதன்னில்
பனிரெண்டுஎட்டுஆறு பத்துடன்செவ்வாய்நின்றல்
இனியபொன்னரவுசேர்ந்து இந்தாதீனத்திருந்தாராகில்
தனியவேமுன்னுள்தானும் தட்டான்தன்மனையேசொல்லு. (32)

சாத்தியலக்கனத்தில் சந்திரனிருந்தாராகில்
யேத்தியேபாபர்வீட்டிலிருந்திடகுருவேதானும்
போத்தியேஇதற்குமுன்னே புலத்தியன்மனையேசொல்லு
சாத்தியோராகுபார்க்க சாணுன்தன்மனையேசொல்லு (33)

சுக்கிரன்ராகுசெவ்வாய் சூரியனுடனேசேர்ந்து
மிக்கவேநீசரானல் வேதியன்மனையேசொல்லு
தக்கவுன்குருவேசேர்ந்தால் தனவான்தன்மனையேசொல்லு
மிக்கவேராகுசேர்ந்தால் கோமுட்டிமனையேசொல்லு. (34)

சொல்லவேஇன்னங்கேளு சுங்கனும்பகைநீசத்தில்
வல்லவனிருந்தாராகில்வாணியன்மனையேசொல்லு
அல்லதோர்பகையில்செவ்வா யிருந்திடவடுகன்மனையாம்
சொல்லவேபுதனும்நீசம் இருந்திடகன்னுன்மனையே (35)

மருவியேராகுகேது வந்துமேநீசம்பெற்ருல்
அரவியும்புதனுஞ்சேரில் அம்மனைசெட்டிசொல்லு
பெருவிலாஅரவிநீசம் பெற்றிடசைவன்வீடாம்
தருவதுகுருவேபகையா யிருந்திடத்துலுக்கன்மனையே. (36)

மன்னவன்செவ்வாய்ராகு மருவியேமூவர்கூடி
சொன்னதோர் நீசக்காரன் பார்த்திடஇடையன்வீடாம்
அன்னமேபுதனும்சேரில் அரையவேதியன்மனையேசொல்லு
இன்னமும்ராகுநீசம் பெற்றிடமுதல்முன்மனையேசொல்லு. (37)

தக்கமனையைசனிபார்க்கச் சனியேஎட்டில்நின்ருலும்
ஒக்கஅரசன்சனிகூடி உடனேபுதனும்தானுேக்க
தக்கமனைக்கிமேல்பாதி சாமிகோவில்தானிருக்கும்
மிக்கபாம்புநின்ருலும் விளங்குமனையேதான்பாழு. (38)

அரவுசெவ்வாய்தான்கூடி அமர்ந்தேஎட்டில்நின்றிடவே
பெருகும்மனைக்குமேல்பாதி பேசலாகும் பாழ்மனையாய்
வருகுமந்தமனை தனிலே வெளவாலடையும்தப்பாது
சருகுங்குப்பைஎலும்புடனே கிடக்குமென்றேசொல்லிவிட்டு (39)

உரைப்பதுகுடும்பந்தன்னை வொன்பாதிரெண்டாமாதி
மறைப்பிலாலாபத்தாலும் வகுத்திடுங்குடும்பந்தன்னை
மறைப்பிலாச்சுபர்கள்நிற்க மனைவலுவாகச்சொல்லு
மறைப்பதுபாவிநிற்க மனைபங்கம்சொல்லுமாதே. (40)

சொல்லலாம்ரெண்டாமாதி சூழ்பாவிகடையனுகில்
வல்லவர்இல்லாவிட்டால் மனைசொந்தமில்லைபேசு
அல்லதுசுபர்கள்நிற்க அவர்கடைநடுவேயோடில்
நல்லதோர்சொந்தமில்லை நல்மனைபங்கமாதே (41)

மாதெனும் குடும்பத்தாதி வருலாபன்பாக்கியாதி
மாதெனும்திரிகோணங்கள் வலுத்திடமாளிகட்டும்

மாதெனும்வாலைபாலன் வந்திடலாபத்தோனும்
சாலவேதனம்படைத்து சந்ததிவோங்குமென்னே. (42)

எட்டினிக்குடையோன்பாவி யிருந்திடசுபர்கள்வீட்டில்
மட்டில்லாப்பாவிபார்க்க மனையதுகெட்டியில்லை
தொட்டிடச்சுபர்கள்கூடி சொட்க்ஷேத்திரஉச்சமானால்
கெட்டியும்கட்டிக்குடியும் கிடைப்பதுமுன்னேசாவே. (43)

பத்திடத்ததிபன்கோணம் பாக்கியன்கூடிநிற்க
மத்தும்யேழிடத்தோன்கூடி வலுத்துமேயிருக்ககெட்டி
சுத்தமாய்நாதியத்த மனையதுயென்றுபேசு
சுத்தனுயிருக்கமன்னன் சுயார்ச்சிதமனையேபேசு. (44)

ஏழிடம்பாம்புநிற்க எட்டாதிஅவனைக்கூட
தாழ்விலாகுடும்பத்தாதி சனிபாவியாகிலுந்தான்
ஊழ்வினைமரணமட்டும் உடன்சொந்தமனையுமில்லை
தாழ்விலாதுரைக்கந்தன் சாத்தினநூலைப்பாரே. (45)

பார்க்கவேயின்னம்யீசா பலனதுசொல்வேன்பாராய்
மூர்க்கமாய்எட்டுஆறு முன்பின்னும்பாவிநிற்க
ஏற்கையில்லாமல்நின்றால் எமபட்டணம்வரையிலில்லை
மார்க்கத்தில்கண்டுநீயும் வழுத்துநல்சோதிடத்தை. (46)

சொல்லுங்காரிசுபர் மனையேரிடில்
நல்லமூன்றுதிரெண்டாதிகூடியே
சொல்லுமன்னனும் சூழ்ந்துயிருந்திட
நல்லமாளிகை நன்மனை வாழுவான். (47)

வாழும்ரெண்டாதி மன்னனைக்கூடிடில்
தாழ்விலாச்சனி முன்பின்யிருந்திட
ஊழ்வினைமுன் உழக்குல்பாதகம்
வாழும்சொந்த மனையதுயில்லையே. (48)

இல்லையில்லை உரைப்பது நிச்சயம்
நல்லரெண்டோனும் யெட்டாதி கூடினால்
சொல்லுமே கடைவீதிகளோடிடில்
இல்லைஇல்லையாம் சொந்தமனைகளே. (49)

## வேறு.

சொல்லிய ரெண்டாமாதி சூரியனுடனே கூடில்
நல்லதோர் செவ்வாய்பார்க்க நயம்படமாட்டாராகில்
அல்லது அஞ்சுஆறு மனையது யென்றுபேசு
வல்லதோர்நாதியத்த மனையென்று சொல்லிப்போடே. (50)

ஆகியமனைக்குள்ளாக அம்மியும்ரெண்டுசொல்லு
தாகிய உலக்கைமூன்றும் தானுரல்குந்தாணிரெண்டாம்
ஏகியமனையில்ரெண்டு குளியது இருக்கும்பேசு
தாகியசூனியங்கள் தங்குமென்றியம்பலாமே. (51)

பரவியசெவ்வாய்புந்தி பனிரெண்டில்பாவரோடே
அருமையாயிருந்தாராகில் அம்மனை பாழேசொல்லு
பரவியவடக்குவீட்டில் பக்கத்தில்கிணறேசொல்லு
திரவியம்நாஸ்தியாகும் தென்புரம்யெட்டடியுந்தள்ளே. (52)

தள்ளுவாய்வடபுரத்தில் சாம்பலுங்குழியுஞ்சொன்னோம்
விள்ளவேஆறுதானும் அடியது தள்ளவேணும்
தள்ளவே கிழக்கு மேற்கு சீரணமனையதாகும்
கொள்ளைபோய்குடிக்கிநாசம் குடிமனைபாழாம்சொன்னோம். (53)

ஆகியவியாழம்வெள்ளி அம்புலிஅரவஞ்சேரில்
தாகியமனைக்குள்ளாகத் தாரமும்ரெண்டேசொல்லு
ஏகியமேல்புரத்தில் யெட்டடிதள்ளவேணும்
தாகியத்தனந்தானில்லை தனக்குமேநன்றதாமே. (54)

ஆகும்குருவும்செவ்வாயும் அமர்ந்துயிருக்கப்பாவருடன்
வாகும்புதனுமேகூடில்மனைக்கித் தெற்கேகோவில்வீடாம்
தாகும்செவ்வாய்சனிகூடில் சாத்தும்தெற்கேமனைபாழாம்
வாகுமதற்குதென்புரத்தில் வளரும்கிணருவீதியுமே. (55)

உரைத்தலக்கினத்தானுக்ஷி ஒள்ளியசுங்கன்கூடி
செரித்தங்கேசேர்ந்துநிற்க தென்புரமனையேபாழாம்
உரைத்திடசெவ்வாயேழில் உருவமாய்நின்றாராகில்
குரையுள்ளமானிடர்க்கு கூரினர்கந்தர்தானே. (56)

எட்டுடனெட்டுவீட்டா னிருந்திடப்பாவரோடே
மட்டுடன்சோமன்காரி மகிழ்ந்துடனிரவிசேர
பொட்டெனமனையேநாசம் போய்விடும் ஆண்டுயெட்டில்
சட்டமாய்போகுமென்று சாத்தினர்கந்தர்தானே. (57)

கொண்டிடும்செவ்வாய்ராகு கூடியேயேழில்நிற்க
கண்டிடும்உலகோர்க்கெல்லாம் கடினமாய்தூங்கும்பாரு
வேண்டிடும்புதனேபார்க்க மேல்மனைக்காரன்சாவான்
சண்டியாய்தட்டுவாணி தானுமேயிருப்பாள்மேற்கே. (58)

குருவுமேசெவ்வாய்ராகு குடுத்தஞ்சுபேர்கள்நிற்க
சாருவாய்செவ்வாய்ராகு தானும்ஒன்பதையும்பார்த்து
சீரியஅஞ்சில்நிற்க தெய்வங்கள்மனையில்செப்பு
ஆருமேஅத்துபோகும் அம்மனைபாழாம்பாரே. (59)

ஆருரெண்டேழுஒன்பான் அவருடவீட்டில்நிற்க
பேருடன்ஞாதிக்காரன் பிரட்டதுசெய்வான்பாரு
கூறுமேதெற்குமனையில் குடியுமேயில்லைபாரு
வீரியமானமன்னன் வேந்தனுல்கெட்டான்பாரு (60)

மன்னவனுதயத்தானும் மருவியலாபகேந்திரம்
பொன்னுமேஇரவிசெவ்வாய் நின்றிடப்பிள்ளையில்லை
சொன்னதோர்மனைக்குள்ளாக சூனியம்பிருக்கும்பாரு
முன்னமேஆதிசாலம் ஊமையன்இருந்தான்பாரே. (61)

ஆமெனும்லக்கினத்தில் அதிபனும்பாவரோடே
நாமெனசெவ்வாய்சேரில் நல்மனைபாழாம்பாரே
ஏகனுய்லக்குனந்தன்னில் எட்டவனிருக்கத்தானும்
சாமெனகொள்ளைபோகும் சண்டையும்வருகும்பாரே. (62)

தக்கவன்செவ்வாய்ராகு சனியெட்டில்சுபரேநிற்க
மக்கவன்மனைக்குள்ளாக வியாதியும்வந்தேகொல்லும்
மக்களும்பொருளும்நாசம் வாழ்வெல்லாம்நாசமாகும்
மிக்கவேகந்தர்சொன்ன விபரத்தையறிந்துபாரே. (63)

பேசியநாளாமாதி பேணியேகோணமேறில்
காசியாத்திரைபோவான் கணக்கனும்பார்வையுற்றல்

தேசமும்சுத்திமன்னன் திசையெட்டும்போவான்சொல்லு
வாசமாயிருந்தோரெல்லாம் வணங்குவாரிவரைத்தானே. (64)

ஆகுமிரவுசனிபுந்தி அனலோன் கூடிஇவர்மனையில்
வேகமாகநின்றிடவே வீடுதோர்ப்பான்தப்பாது
சாகுமனையிலிருந்தோர்க்கு தரித்திரங்கள்தங்குமது
பாருமனையேபாழாகும் பரிந்துநாலாமிடந்தனிலே. (65)

காணும்லக்கினத்தில்செவ்வாய் கருங்கோளும்மதியும்நின்றால்
வாணுறவீட்டுக்குள்ளே வம்மிஷம்அஞ்சேசொல்லு
காணுரயிரண்டுபேர்க்கு சந்ததியில்லைகாணும்
தாணுரஒருவனுக்கு தாரமும்ரெண்டேசொல்லு. (66)

சொல்லியரெண்டாமதி சூரியனுடனேகூடில்
நல்லதோர்செவ்வாய்பார்க்க நலம்படமாட்டாதாகில்
அல்லது அஞ்சு ஆறு மனையது என்றுபேசு
வல்லதோர்நாதியத்த மனையது என்றுசொல்லே. (67)

ஆகியமனைக்குள்ளாக அம்மியும்ரெண்டேசொல்லு
தாகியஉலக்கைமூன்றும் தானுரல்குந்தாணிரெண்டாம்
ஏகியமனையில்ரெண்டு குளியதுஇருக்கும்பேசு
தாகியசூனியங்கள்கூட தங்குமென்றியம்பலாமே. (68)

## வேறு.

பய்யதாய்காரியேழிடம்செவ்வாய் பனிரெண்டாமதியுடன்நிற்கில்
தையலாலொருத்திவிதவையுமாகி சந்ததிஅத்துமேயிருப்பாள்
வையதோர்மனைக்கிமேல்புறம் மனையில்விளங்கியதாரமும்ரெட்டை
கையதுஒடிந்துமுடவனுமாகி காலையாயிருந்துபின்செத்தான். (69)

## வேறு.

மந்திரிபுந்திக்கேளில் மன்னவன்வெய்யோன்சேரில்
சுந்திரமானராகு துகையுடன்லாபம்சேரில்
விந்தையாய்மனைக்கிதெற்கில் வீதியும்சந்தேசொல்லு
சந்திரமனைக்கிக்கீழ்பால் துலங்காதமனையேசொல்லு. (70)

வணங்கியநாலாமாதி மன்னவன்சுங்கன்சேரில்
இணங்கியஆறுஎட்டில் யீராரில்யிருந்தாராகில்
வணங்கியதாரம்ரெண்டு மன்னவன்செய்வான்பேசு
தனங்களும்சேதமாகி தரித்திரம்தங்குமென்றே. (71)

ஆறுமிடத்தில்அம்புலியும் அமர்ந்துபாவருடன்கூடி
சீறுமிருக்கதென்புரத்தில் தெய்வமுண்டுவிளங்காது
ஆறுமனையும்நாஸ்தியதாம் அடியோடத்துப்போகுமது
சேறுமனையும்சேர்ந்ததினல்சேயும்மனையும்விளங்காதெனச்சொல்லு

## வேறு.

சொல்லியராகுசோமன் சூரியன்கூடிநின்றால்
வல்லவனின்றராசி வாங்குறசரமேயானல்
நல்லதோர்கிழமேல்வீதி நாடியேதெற்குவாசல்
உள்ளதோர்சுங்கன்கூடில் வொருவனுபிருப்பான்வீட்டில். (73)

சொன்னதோர்லக்கனதி சூரியன்சோமன்கூடில்
நல்லவர்கூடினலும் நாடியேபார்த்தாறுகில்
இல்லெனசகோதரங்கள் வேசியாயிருப்பாளென்று
நல்லவர்கந்தர்சொன்ன நல்லதோர் நூலைப்பாரே. (74)

பாரெனபுந்தியெட்டில் பனிரெண்டிலேறிநின்றால்
ஆரவேசுபரேநல்ல வவரவர்வீட்டில்நிற்க
கூறவேமாமன்வர்க்கம் குடியதுமில்லைகண்டாய்
சீரியதெய்வத்தாலே சிந்திப்போங்குலங்களெல்லாம். (75)

மன்னவன் வலுத்தானகில் மருவிய கேந்திரத்தில்
பின்னமாயிரவி செவ்வாய் நின்றிடப் பிள்ளையில்லை
சொன்னதோர் மனைக்குள்ளாக சூனியமிருக்கும்பாரு
முன்னமே ஆதிகாலம் மூகையனிருந்தவீடே (76)

ஆமேமனைக்கித் தென்புறத்தில் ஆலயங்கள் கிணறுமாகும்
தாமே நான்கில் கேது உறில் தனக்குமேற்கு வலுத்தமனை
பூமன் காரியுடன்மேவ பிள்ளையில்லை அம்மனையில்
தாமே மேற்குமனைதனிலே தாரம் மூன்று தப்பாதே. (77)

வெய்யவன் விரையமெட்டில் வெண்மதி கூடிநின்றால்
தையலே மனையைவிட்டுத் தான்போவான் வனவாசங்கள்
ஐயனே குருவுங்கூடில் ஆஸ்திகள் நாஸ்தியாகும்
துய்யனே கிணறு தூர்ந்த மனையதாமென்று சொல்லே. (78)

சொல்லலாஞ் செவ்வாயெட்டில் சூரியனுடனே பாம்பு
மெல்லவே கூடிநின்றால் விஷத்தினால் மரணமுண்டாம்
அல்லவே மனையிலாதி பங்காளி யிருவருண்டு
வல்லவனொருவன்றானும் வனவாசம் போவான்பாரே. (79)

வெய்யவன் யெட்டில் நிற்க வியாழனும் மதியுங்கூடில்
தையலே மனைக்குத் தெற்கு தாரம்ரெண்டு செய்தவனும்
துய்யதாம் வடபுறத்தில் துலங்கிடுந் தெய்வந்தானும்
மெய்யதாயுரைத்தார் கந்தர் சிவன்கோயில் மேற்கிலுண்டே (80)

காணலாம் ராகு செவ்வாய் காரியுங்கலந்து நின்றால்
வாணுருமங்கையாலே அழிந்திடு மனையதாகும்
தேனவிள் ஆடுமாடு திரவியங் குறைவாஞ் சொல்லு
காணலாஞ் சிலகாலத்தில் கஷ்டங்கள் மிகவுண்டாமே. (81)

வன்புறு ராகு கேது மதி சனி யிவர்கள் நாலில்
இன்பமா யெட்டிற்பத்தி லிருந்திடக் கேந்திரத்தில்
அன்புடன் சேர்ந்தாராகில் அம்மனைக் கிணறுமுண்டு
தன்பதிதனிலே யிப்போ தான் கிணறிருக்கும்பாரே. (82)

எண்ணவே யரசன்புந்தி ஏழிடங்காரி நின்றால்
திண்ணமாம் பெண்களாலே தீங்குகள் மிகவுண்டாம்
வண்ணமாமனை வடக்கில் வாழ்க்கோரை நாசஞ்சொல்லு
எண்ணவே யிடிவிழுந்த மனையதாமென்று சொல்லே. (83)

கொஞ்சிய மதியுங்கேது குருமனை யேறிநின்றால்
வஞ்சியே ரெட்டைப்பிள்ளை பிறந்ததோர் மனையதாகும்
தஞ்சமாயந்தவீட்டில் சற்புத்திரன் வனவாஸத்தில்
மிஞ்சியே நாணுசெத்த மனையென விளம்பலாமே. (84)

பொல்லார்யேழில் நின்றிடவே புதனுங்கூடி நீசமுற
நல்லோரவரைப் பாராமல் நாலாமனைக்கி மேல்புறமாய்

வல்ல அரசன் சனிகூடி மதியுமிருக்க மனைபாழு
சொல்லமனையில் இரண்டுகிணர் தூர்ந்தமனையாமெனப்பேசு (85)

சூரியன் வியத்தில்காரி சுக்கிரன் செவ்வாய் கூடில்
தேடிய தனங்களெல்லாம் தெண்டத்தால் விரயமாகும்
நாடிய மூன்றுநாலு வம்மிஷம் பாழதாகும்
தேடிய கந்தர்சொன்ன செய்தியை அறிந்துபாரே. (86)

போற்றிய ராகு செவ்வாய் புதன் சனி கூடிநின்றால்
சாற்றிய மனையிலிப்போ சந்ததியில்லை சாற்று
பாத்தியமொருவன் முன்னாள் பட்சமாயிருந்தானூரும்
தூற்றிய மனையிலிப்போ சண்டையுஞ் சாவுஞ் சொல்லே. (87)

சொல்லலாம் வடபுறத்தில் சூனியம்மிருக்கும்சொல்லு
அல்லது கிணறுந்தெய்வம் அவடத்தில் மரமுமுண்டாம்
நல்லதாயிருக்கமாட்டார் நாசமாம் வடக்கு தன்னில்
மெல்லியாள் தலைச்சம்பிள்ளை வைத்ததோர் மனையாஞ்சொல்லே 88

குலமதிலுதித்தபாலன் கொள்ளியும் வைப்பான் சொல்லு
நலமதாய் வாழ்வான்பாலன் நலமில்லை மனையிற்சொல்லு
பிலமொரு மங்கையொன்று பிறர்தாரம் சேர்மானங்கள்
அலைதரு மங்கையாலே அவதிகள் வருமென்றாரே. (89)

## வேறு:

தக்கநான்கா மதிபதி யுச்சனாய்
மிக்க யேழுக்குடையவன் நீசனாய்
அக்குலந்தனில் நானுமே செத்தவன்
மிக்க கட்டினமனை யெனப்பேசிடே. (90)

தானுற நான்காமதி சந்திரன் புதனுங்கூடி
வானுரவியமாரெட்டில் மன்னனு மிருந்தாராகில்
தானுற மனையிலிப்போ சாந்திகல்யாண முண்டாம்
தேனுறு பூமிதான்யஞ் செல்வமு முடையோர்தானே. (91)

## வேறு.

அன்னமே மிதுனங்கன்னி ஆதித்தன் செவ்வாய் நின்றால்
அன்னமே ரிஷபம்கன்னி அரசனும் மதியும் நின்றால்
அன்னம்போல் ராஜயோகம் அம்மனைக்காகும் சொல்லு
அன்னமே செல்வம் புத்திரன் அரசாளும் ராஜயோகம். (92)

கூறலாம் புத்திரர்தானிங் குடியது விளங்கரெண்டு
நேரதாம் தாரம்ரெண்டு நிச்சயமாகச் சொல்லு
சீரதாய் ஆடுமாடு செல்வமும் மிகுதியாகும்
பேரதாய் கீர்த்தியுண்டாம் பெருமையாய் வாழ்வர்தாமே. (93)

## வேறு.

உரைத்தனர்காரி பாவிகளுடனே வோணத்திலேறியே நின்றால்
குறைத்தநல் ஸ்தானம் வலுத்துமேயிருக்கும் குதிரையும் [கட்டினமனையாம்
உறைத்திடுமூன்றில் பாவிகளிருக்க ஒடுவான் மனைதனில் தங்கான்
உறைத்தநல்மனையும் நாசமதாகும் ஒதவாதமனை யெனப்பேசே 94

குன்றுமனையில் தென்புறத்தே குறியே ரெண்டுதானாகும்
நன்றுங்காரியுடன் செவ்வாய் நாடியிருக்க யிடிவிழும்
அன்றே மனைக்கி தென்புறத்தில் ஆலயங்கள் மிகுதியுண்டாம்
நன்றாயுரைத்தார் கந்தனுமே நன்மைநூலைத் தான்பாரே. (95)

## வேறு.

நண்ணியகாரி செவ்வாய் நாலெட்டில் கூடிநின்றால்
அண்ணிய வடபுறத்தில் அஞ்சடி மனையே ஆகா
திண்ணிய கேதுகூடில் தென்புறம் மூன்றே ஆகா
பண்ணியராகு கூடில் பாழ்மனை யென்றார் கந்தர். (96)

ஊனுயர் மதியேபார்க்க உற்றிட நாசமாகும்
தானொரு பாவிவீட்டில் சந்திரனிருந்தாலுந்தான்

தேனெனக் குருவுஞ் செவ்வாய் சேர்ந்திடில் மனையே யோங்கும்
வானொருஞ் சிலகாலத்தில் வந்திடும் ராஜயோகம். (97)

## வேறு.

பரவர்யேழில் பனிரெண்டில் பாவரிருக்க அம்மனையில்
திரமாயிரண்டு ஆணாகும் செவ்வாயிருக்க யொன்றேயாம்
குறைவாஞ் செல்வம் தானாகும் குடியேபோகும் தப்பாது
உறவே பகையுந்தானாகும் உற்றார்பகையுந் தானாகும். (98)

ஆனமனையில் புதையலுமே அமர்ந்துயிருக்க குருதிக்கில்
தானுங்குழியிங் கிணறுமுண்டு சாமிகல்லுந் தான் கிடக்கும்
மானேமங்கை வனவாசம் வாழாப்பெண்ணே தானிருப்பாள்
காணுமனையில் மூன்றாணு கன்னியிருப்பாள் நாலைந்தே. (99)

## வேறு:

அன்னமேசசியினாலே அவனுட ராசிசொல்லு
வின்னமாம் வெள்ளியாலே விளைநிலம் பூதுசொல்லு
சன்னமாங் குருவினாலே சந்ததியறிந்து சொல்லு
மன்னனால விபரம்பார்த்து வையகமறியச் சொல்லே. (100)

என்ற சொற்கருமஞ் சொற்பமிவனுக்குப் பாலரில்லை
நின்றதோர் பாலர்தானும் நீசபோகங்கள் செய்வான்
சென்றனர் காரிபத்தில் செவ்வாயுங் கூடிநின்றால்
நன்றொருமங்கைசாபம் நாசமாங் குழவியெல்லாம். (101)

கூருந்தனுசு மீனமதில் குருவும் புதனுங் கூடிநின்றால்
பேருஞ் சம்பத்துண்டாகும் பெறுவார் மைந்தனுடன் றானுஞ்
சீரும்மேன்மை செல்வமுடன் சென்னல்சேரும் மகிழ்வுண்டாம்
ஆருந்தெரிய வையகத்தில் அறைந்தார் கந்தஸாமியுமே. (102)

## வேறு.

திருந்திய புதனுங்காரி சேய்மதி கூடியொன்றாய்
வருந்தியே மூன்றில் ஐந்தில் மகிழ்ந்துடனிருந்தாராகில்
அருந்தவ முனியைப்போல ஆண்மையும் அழகுமுண்டாம்
பொருந்திய செல்வம் மேன்மை பூஷணமதிகமாமே. (103)

## வேறு.

ஐந்தாமிடத்தில் செங்கதிரும் அணுகியிருக்க சனிதானும்
வந்தே நான்கில் குருயிருக்க மதிதான் கேந்திரம் பெற்றாக்கால்
சொந்தமாகும் மனைதானும் சொல்லும்மனையேவலுக்குமென்று
சிந்தைகூறும் செல்வமென செம்மையாக வாழ்மனையே. (104)

வாழும் மெத்தைமனையாகும் மைந்தன் தனங்களுண்டாகும்
ஆளும் அரசுசெங்கோலும் அதிகாரங்களுண்டாகும்
தாழ்வுயில்லாச்செல்வமுண்டாம் சகோதரங்கள் மிகவாழும்
வாழ்வுதருகுமெனச்சொல்லிவாழ்த்துங்கந்தர்தான்சொன்னார். (105)

## வேறு.

உதயலக்கினத்தில்யெட்டில் வொன்மதியிருந்தானாகில்
இதமுறமிடந்தானென்றால் யிடிமனைப்புத்ததாகும்
இதமுறயெட்டில்செவ்வா யிருந்திடவடக்கேபாழாம்
நிதமுறச்சனிதானின்றால் நேத்திரம்போகும்பாரே. (106)

சூரியன்வலுத்துநின்றால் சூத்திரன்மனையதாகும்
மீறியசசிவலுத்தால் வேளாளன்மனையதாகும்
கூரியசனிவலுத்தால் கோமுட்டிமனையதாகும்
பார்மகன்வலுத்தானாகில் பாக்கியவான்மனையாம்பாரே. (107)

வேண்டியராகுகேது வேடர்கள் துலுக்கராகும்
தீண்டிடாத்தாழ்ந்தஜாதி யிருந்திட்டமனையேசொல்லு
ஆண்டவன் புந்திகூடில் லக்கனமிருந்தவீடாம்
ஈண்டியகொல்லன்செட்டி இயற்கையாய்வாழ்ந்தாரில்லம். (108)

எண்ணியசனிக்கிவண்ணான் இரணியன்சாதிசொல்லு
புண்ணியபூமன்நிற்க பூமகன் அரசன்சாதி
எண்ணாறும்யிரவிபுந்தி யிருந்திடஇடையராகும்
வண்ணமாய்ராகுகேது மந்திரவாதியாமே. (109)

எழுக்குயேழுகோடாய் யேழுமேவீடதாகும்
தாழ்வில்லாமனைக்கிவந்த நாள்தனைமுன்னால்வோட்டு
தாழ்வில்லாலெக்கந்தன்னை தானும்அப்படியேவோட்டு
தாழ்வில்லாகிரகம்மூன்று தடவரைவோட்டுமாதே. (110)

வரிரெண்டுசனியேவந்தால் மனையதுசூனியங்கள்
வரிரெண்டுபாம்பதாகில் மண்டையோடெலும்புசாம்பல்
கரியுமிஉளுகும்பூச்சி காணுமேரெட்டைப்பூயோன்
அரியவேரெட்டைநீறு அய்யனேகிணரென்றேதே. (111)

பாரியபுதனேரெட்டை பாழ்மனையாகுங்கட்டான்
காரியும்பிள்ளைகணிதன் காட்டலாம்குளிகளாகும்
வீரியபெண்ணுள்ரெட்டை வெங்கலம்தனங்களாகும்
பாரியகனலன்ரெட்டை பாழுபாழ்மனையேதள்ளே. (112)

மன்னனேரெட்டையாகில் மகாராஜன்மாளியாகும்
அன்னமேயோகரூபன் அரசாளும்ராஜபூசன்
அன்னமேதேசங்கீர்த்தி அடைவதுநேயமுள்ளான்
அன்னமேபூகோளத்தில் ஆதிசல்லியமேபாரே. (113)

காணவேகாலுங்காலு காண்பதுபிள்ளைநாஸ்தி
காணவேஉடலுமற்றால் சந்ததிவலுத்துப்போகும்
காணவேதலையுமாகில் கற்பநோய்சஞ்சாரங்கள்
காணவேமுழுவனுகில் ஆஸ்தியும்மேன்மைமாதே. (114)

ஒன்பதுபேருங்கண்டு ஒட்டுவாய்சல்லியங்கள்
ஒன்பதுக்கொன்பதாகி வோட்டுவாய்மூன்றுவோட்டம்
இன்புருலெக்கம்வீடாய் எண்ணியேமாரிப்போடு
அன்புருமூன்றுவோட்டம் இருத்துவாய்சல்லியம்பாரே. (115)

பாரேரெண்டுபேருற்றால் பங்கிலிருக்கும்சல்லியமாம்
கூறேவொன்றுயில்லையென் கோள்கள்காலுங்கூடிடினும்
பாரேஅரைகா சல்லியமாம் பாம்புமுக்கால்பாழ்குளியாம்
நேரேமுழுநாள்இல்லையென உரைப்பாய்சல்லியமுறையாமே. (116)

காரிக்கிதனியேயானல் காண்பதுமனையேகட்டான்
பாரியகாலும்புந்திகூடிடில் பாலர்நாஸ்தி
மாரியேஅரையுமுக்கால் மடிவதுதலைவனுகும்
சூரியன்ரெட்டையாகில் சூனியம்பாராங்கல்லே. (117)

கல்லதுயிருக்குந்தாவு கணக்குடன்லெக்கங்காணு
சல்லியமெதெய்வம்ஒடு சாம்பலுசனியோராகு

அல்லதுசனியுஞ்செவ்வா ஆடுமேயெனும்பிரும்பு
வல்லவர்கந்தர்சொன்ன வளப்பநூல்ஆய்ந்துபாரே. (118)

பார்க்கலாம்அரைநாள்தன்னில் பாவிகள்மூவர்வந்தால்
பார்க்கலாம்வேருகல்லு பாழானயெனும்புசாம்பல்
பார்க்கவேபுத்துகாட்டும் பல்லுகள்மண்டைவோடும்
பேற்கையாய்லெக்கங்கண்டு யெடுக்கவேசொல்லுமாதே. (119)

வள்ளல்சேய்இரவிதானும் வருங்காரிகூடியேர
தள்ளவேமுன்னும்பின்னும் சனிபாம்புவோடிநிற்க
மெள்ளவேசன்னுசியாகி ஆகுவான்மேற்குபேசு
தள்ளவேநின்றாராகில் சன்னசிசிலநாள்பேசே. (120)

அன்னமேசெவ்வாய்ரெட்டை ஆயிடில்அடுத்ததிக்கு
அன்னமேபாளதாகும்। அம்மனைபுத்துகிணராம்
அன்னவேகுருவேபுந்தி அமந்திடதிக்குயோகன்
அன்னமேதனங்கள்பூமி அதிகாரம்செய்வான்றனே. (121)

தருவதுபாம்புரெட்டை தான்பாவிகூடிநின்றால்
வருவதுநின்றராசி மனையதுபாழுபேசு
தருவதுமுழுநாளாகில் தானியம்மெத்தைவீடாய்
வருவதுயோகம்மேன்மை மகராஜனுகிவாழ்வான். (122)

அன்றியேசனியுங்கேது அங்காரகன்கூடினும்
யென்றிசைதிக்குதன்னில் யிடியதுவீழ்ந்தமனையாம்
யென்றிசைஅதுக்குப்பக்கம் யிருப்பதுகோவில்பேசு
யென்றியதோப்புகோவில் யிருபுரம்பேசுமாதே. (123)

அன்றியரெட்டைராசி ஆதித்தன்சரியாய்நின்றால்
அன்றியபுதனும்முன்பின் அல்லதுபக்கம்நின்றால்
யென்றிசைபோற்றும்பாவி யிவனுக்குபுத்திரநாஸ்தி
யென்றிசையோகம்பாக்கியம் யிவனுக்குநாஸ்திமாதே. (124)

பாரியசெவ்வாநின்ற திக்கினில்பாழ்மனையாம்
காரியும்பாம்புநிற்க வீதியில்நாஸ்திமனையாம்

சூரியன்கேதுநிற்க துலங்காதமனையேவீதி
காரியும்புந்திநிற்க களஸ்திரம்ரெண்டுமாதே. (125)

மாதெனும்புதனுஞ்சுங்கன் வருவீதிவனவாசங்கள்
போதவேபுதனுஞ்சுங்கன் கூடிடில்பிள்ளையில்லை
யேதமாய்ராகுகாரி இருந்திடநாஸ்திமனையாம்
பாதகர்மூவர்நின்றால் பாழ்மனையெண்ணும்பாரே. (126)

பார்க்கவேகாரிபுந்தி பக்கமேநின்றாராகில்
சேர்க்கையாய்சனியுங்கூடில் செப்பலாம்மனையேபாழாய்
மூர்க்கமாய்முன்னும்பின்னும் மூடர்கள்யிருவர்நிற்க
பார்க்கவேநாணுசெத்த மனையதுயென்றுபேசே. (127)

பேசலாநாலுஎட்டு பின்னுமேலக்கம்வந்தால்
பேசலாம்மனையில்தானும் பெருங்குழிகிணறுபேசு
பேசலாம்தீயோர்நிற்க பெருஇடிவிழுந்தமனையாம்
நாசமாய்போகுமென்று நாட்டினார்கந்தர்நூலை. (128)

தருவதுசிரசேபுந்தி தான்கேதுசனியேநின்றால்
வருவதுமுன்னும்பின்னும் வருல்க்கம்குறைவாய்வந்தால்
தருவதுதனங்கள்பாக்கியம் சமமத்துநாஸ்திக்காம்
உருகியமனந்தளர்ந்து ஒடுவான்சனியின்திக்கே. (129)

ஒட்டிசல்லிங்கள்தானும் உலகத்தில்பலருஞ்சொன்னார்
கிட்டிநீபார்க்கவேண்டாம் கிடைப்பதுஅரிதேபாலா
சட்டியும்யெலும்புசாம்பல் சனிநின்றபாகமாகும்
அட்டியும்யில்லைபாரு அருமுகனுரைத்தநூலே. (130)

காரியும்புதனுங்கூடி கலைமதிபக்கம்நின்றால்
பாரியநின்றவீதி பாழ்மனையாகும்பேசு
காரியுங்கிழவனாகில் காணலாம்மாட்டெலும்பு
பாரியாள்நாசமாகி பக்கமும்பாழுபாழே. (131)

பாழெனஉரைக்கலாகும் பாம்புமேரெண்டாய்நிற்க
தாழ்வில்லாமனையில்செல்வம் தங்கியேநாஸ்தியாகும்

தாழ்வில்லாபுத்திரமேன்மை தான்கொள்ளிபிள்ளையில்லை
தாழ்வில்லாமேனிதன்னில் தரிப்பதுரோகம்மாதே. (132)

குருமதிகூடிநின்ற ராசியின்வீதிமேன்மை
தருவதுதனங்கள்செங்கோல் தரனியையாளவல்லன்
தருவதுபுத்திரபூமி சம்பத்துமேன்மையாகும்
திருவதுமேன்மையென்று செப்பினர்கந்தர்தானே. (133)

ஈனமேகேதுசெய்வான் யில்லரம்பாழுகாரி
உன்மேவின்னம்செய்ய-உளியனு-ராகு-வேடன்
கானகவனவாசங்கள் காரியும்புதனேசெய்வான்
தானமாந்தலங்கள்விட்டு சன்னசிசெய்வான்ராகே. (134)

×உளியன்-என்பது×இராகுக்கு×வேடன்-என்பது-செவ்வாய்

நாரியேமுதலாம்வீட்டில் நல்சனிபாம்புநின்றால்
மாரியேஅந்ததிக்கில் மனையதுபாழுபேசு
மாரியேமூன்றுநாலு வருமனைபாழுபேசு
காரியேபாம்புசேயும் கதிருமேகூடில்ப்பாழே. (135)

## வேறு.

நாடிக்காரியும் பங்கஞ்சேயாயிடில்
கூடிபாம்பு குசனுடன்நண்ணிட
தேடிதென்புரம் சென்னலும்பட்டியாம்
வாடிநின்று மனைகளும்பாழுபாழ். (136)

சாதியோனும் சடிலனுங்கூடியே
நீதியாய்ச்சனி நீசனுங்கூடியே
ஆதிகாலம் அமர்ந்தநல்செல்வமும்
நீதியாக யிருந்துபின்நாசமே. (137)

## வேறு.

அடியோனுடன்புதன்கூடியே அதிலேபாவியேற
கடியோனுடன்தடியன்களும் கதிரும்கூடிநிற்க
படியுந்தன்செல்வங்களும் பாழும்பரியாகும்
குடியனுடன்குருகூடிலும் குடும்பந்தனயோகன். (138)

## வேறு:

ஆனசந்திரன் அம்பட்டன்கூடியே
தானவீதிபுகர் முழுனூர
தானசெல்வமும் மாளிகைகட்டுவன்
ஊனமில்லாமல் வோங்கிவளருமே. (139)

கடியன்காரியும் கூடிடில்நாசமாம்
படியும்பிச்சை யெடுப்பதுபேசிடு
குடியும்வோங்கிவளரு வதில்லையாம்
மடியுங்காலன் யிவைபலன்பேசிடு. (140)

அன்னக்காரனும் ஆதித்தன்கூடியே
இன்னம்பாவியிருக்கி னும்பங்கமாம்
மன்னன்சுங்கனும் வந்திடயோகமாம்
பின்னமேதனம் யேரியிறங்குமே. (141)

ஆனசுங்கன்புதன் மதிவிண்ணலான்
ஆனசெல்வமும் மாளிகைஅம்மனை
தானயோகமும் பாக்கியம்மேவிடும்
தானங்கண்டு உரைப்பதுசல்லியம் (142)

## வேறு.

கரியனேகேதுதீரன் கோணிதன்சடிலன்கூடி
அரியனும்முழுமையோ அம்மனைவிர்த்திபேசு
கரியனே அரையேமுக்கால் காலதுசெவ்வாய்நின்றால்
அரியவேமனையேகட்டி அவன்குடியிருக்கான்மாதே. (143)

பாரியரெண்டுகேது பாதியில்நின்றாகில்
மாரியமனையில்புத்து வாழ்மனைநாசமாகும்
காரியுங்கூடினாலும் கட்டுமுன்மரணம்பேசு
பாரியாள்புத்திரநாசம் பாக்கியம்பாழாந்தெண்டம். (144)

அன்றியபுந்திமன்னன் அம்புலிவீதியேர
அன்றியதிக்குயெல்லாம் அழிபடும்மனையேபேசு

அன்றியபின்னால்விர்த்தி ஆதினுள்முழுமையாகில்
அன்றியநாஸ்தியெல்லாம் அடைவதுராசயோகம். (145)

காணும்புந்தியுங்கதி ரோனுங்கூடியே
காணுமம்புள காரியும்வீடுர
காணும்யிம்மனை கட்டிடயோகமே
காணுமேதன யோகமுண்டாகுமே. (146)

பன்றுமூன்றுசுபர் வொருவீதியில்
பின்னும்பாவிகள் கூடியிருக்கினும்
யெண்ணும்யிம்மனை யீடேரிவாழுமே
கண்ணன்மன்னன் யிருக்கினும்பேசிடே. (147)

## வேறு.

பொன்னோன்மூன்றில்நின்றிடவே புதனுங்கூடிகேந்திரத்தில்
வண்ணமானமனை தனிலோர்மச்சுவீடுகட்டுவானும்
யென்னுகட்டியிருந்தாலும் யிவர்க்குவயதுஅற்பமதாம்
சொன்னார்கணிதவல்லோரே சோரம்போகுமென்றுரையே. (148)

ஆமேமூன்றுக்குடையோனும் ஆருமாதிசேர்ந்தாலும்
தாமேமூன்றில்குருபுகரும் சசிதான்கூடிநின்றாலும்
தாமேமனையுமுன்னாலே தனக்குச்சொந்தமனையல்ல
பூமன்கூடிநின்றிடவே பெண்ணுள்வந்தமனையாமே. (149)

போவான்மனைக்கிகீழ்புரத்தில் பொல்லாதுஷ்டன்மனையாகும்
தேவர்மனைக்கிதென்புரத்தில் தீட்டுகாடுசேறுசொல்லும்
மேவாமனைக்கிவடபுரத்தில் விருத்தியானமனைரெண்டு
தேவர்பாரில்லாமல் போகுமனையில்ஒன்றுமே. (150)

பொன்னோன்கேந்திரம்பெற்று மதில்புதனும்சுங்கன்கூடிடவே
மன்னோனிருக்கதனயோகம் வருமேபுத்திரபூமியுண்டாம்
பின்னால்செல்வமதிகமுடன் பெறுவான்குதிரைமாடாடு
தின்னமரவேயேரிகுளம் செய்வானென்றுபேசிவிடே. (151)

பொன்னோன்காரியுடன்கூடிப் புதனுமிருக்கலக்கினத்தில்
அன்னோன்மனையில்நிட்சேபம் அரியுமறியுங்குசனுடனே

பின்னாலரசன்நின்றாலும் பேசுமனையுஞ்சொந்தமில்லை
மன்னுங்கடைசிகாலத்தில் வந்தமனையாமென்றுசொல்லே (152)

அந்தகன்மூன்றில்நிற்க ஐந்தினுக்குடையோன்சேர
மைந்தனுங்கேந்திரத்தில் மன்னவனுடனேகூடி
செந்தியும்பார்வையுற்றால் தீப்படும்மனையேசொல்லு
வந்ததோர்தனங்களெல்லாம் மன்னரால்விரையமாமே. (153)

திருந்தியபுதனுங்காரி சேய்மதிகூடியொன்றாய்
வருந்தியேமூன்றிலைந்தில் மகிழ்ந்துடனிருந்தாராகில்
அருந்தவமுனியைப்போல் ஆண்மையும்அழகுமுண்டாம்
பொருந்தியசெல்வமேன்மை பூஷணமதிகமாமே. (154)

சூரியன்செவ்வாய்புந்தி துடர்ந்தவமன்னன்கூடி
மீரியலக்கினத்தில் கேந்திரம்பிடித்திட்டாலும்
சீரியமனைக்கிகுற்றம் செப்பவொண்ணாதுபாரில்
பாரியாய்மனைவலுக்கும் பாக்கியம்பெருகுமென்றே. (155)

லக்கினத்தில்தானும் நாடியேசுபரிருக்க
ஒக்கவேஆட்சிபெற்று பிறந்திடமனைவலுக்கும்
திக்கெனபூமிமக்கள் செல்வமும்மிகுதியாகும்
பக்குவவெள்ளிநீசம் பெற்றிடகுற்றஞ்சொல்வாய். (156)

ஆமெனும்லக்கனாதி அஞ்சாமாதிபன்றன்னோடு
தாமவர்கூடிநின்றால் தன்மனைமேற்குபுத்தாம்
வாமசூரியனுங்கூடில் மனைதனில்கருப்புத்தெய்வம்
தாமினியிருக்குதென்று சாத்தினார்கந்தர்தானே. (157)

ஆமுறைலக்கனத்தோன் அஞ்சாதியுடனேசேர்ந்தால்
காமுருசனிசேய்ராகு கலந்துமேகூடிநின்றால்
போமெழில்மனைக்குமேற்குப் புகழிலாமனையதாகும்
தாமகிழ்மனையாள்செத்த மனையெனச்சாற்றலாமே. (158)

தேரியலக்கினகேந்திரஞ் செவ்வாயும்பலமாய்நிற்க
மாசிலாராசயோகம் மனைதனிற்கிணறுஞ்சொல்லு
பூரியவனவாசங்கள் போனவர்திரும்புவார்கள்
பாரியாள்ரெண்டதாகும் பாலகன்விர்த்தியாமே. (159)

எண்ணியலக்கினத்தி லிருந்தவர்பாவியாகில்
நண்ணியபுதனைச்சேர்ந்தோ ரத்தனைகதவுசொல்லு
திண்ணமாங்குருவைச்சேர்ந்தோ ரத்தனைசொம்புண்டாகுந்
திண்ணமாஞ்சனியைக்கொண்டு செப்பலாமுறிகள்தானே. (160)

தூண்டியபாவிகேந்திரம் சுபரும்சுபக்ஷேத்திரத்தில்
மீண்டியேயிருந்தாராகில் செல்வனைப்பெறுவதாகும்
பூண்டிடுமாடுமக்கள் பூஷணமிகுதியாகும்
ஆண்டதுக்குள்ளேயென்று ஆதியில்கந்தர்சொன்னர். (161)

கட்டிடாலக்கினத்தில் காரியுஞ்சசியுஞ்செய்வாய்
திட்டமாயெட்டுபத்தில் சேர்ந்திடமனையேபாழாம்
அட்டமத்ததிபன்பார்க்க வம்மனையோங்குங்கட்டி
இட்டமாயறிவாயென்று யியம்பினர்கந்தர்தானே. (162)

பொருந்தியதிரிகோணத்திற் பொல்லாதபாலர்நிற்க
வருந்தியநாலுமாறு மதிரவிகூடிநின்றால்
திருந்தியமனைக்குப்பக்கம் தெய்வமும்வடக்கேசொல்லு
புரிந்திடுமனைக்குதெற்கு புதுமனைகட்டுவானே. (163)

நன்றதாய்த்திரிகோணத்தில் நற்சுபரிருந்தாரகில்
கன்றிடாச்செல்வம்பூமி கனதனமிகுதியுண்டாம்
நன்றிடாத்தருமஞ்செய்வர் நிலக்குமேகுலங்கட்கெல்லாம்
நன்றதுவருமேயென்று நற்கந்தரருள்செய்தாரே. (164)

சொல்லிடுலாபகேந்திரம் சுக்கிரன்வலுத்துநின்றால்
அல்லதுதிரிகோணத்தில் அமைந்துமன்னவனும்நிற்க
நல்லதோர்மனையதாகும் நாடியதோஷம்சொல்வாய்
வல்லவனாகித்தானும் மண்ணினில்வாழ்வநன்றே. (165)

உரைத்தலக்கினத்தானுக்ஷி உள்ளியசுங்கன்கூடில்
செருத்தங்கேசேர்ந்துநிற்க தென்புறம்மனையேபாழாம்
தரைச்சுதனேழில்நிற்கச்சஞ்சலமுண்டாகும்
கருத்திரங்குழலினாளே கந்தர்தன்மொழியிதாமே. (166)

திருமகனெட்டில்நிற்கச் செந்தியுஞ்சேர்ந்தாராகில்
வருவதுகெட்டிமெத்தை மன்னவன்நீசம்பெற்றால்

திருவிழாமானேபூமி திரவியமனைத்துமில்லை
குருவதுசாபத்தாலே குலத்துக்கேயீனமாமே. (167)

## வேறு.

பேசவேயிரண்டில்பாவருறில் மின்னுங்கேந்திரம்சுபரிருந்தால்
வாசமறவேமனைசேரும் மக்களுண்டாமனைதனிலே
பேசுமிரண்டுபுத்திரனும் பின்னால்விளங்குமொன்றாகும்
பாசமறவேசுபர்கூடில் பாலர்நான்குயெனசொல்லே. (168)

சொல்லேகாரிபாம்புபுரவி சுங்கன்கூடிநின்றால்
நல்லோர்பார்க்கநின்றிடவே நாடுமனையேவலுவதாகும்
அல்லல்துன்பம்நோயுண்டாம் அரசனாலேபயமாகும்
வல்லோனாலேகலகமுண்டாம் வகுத்தார்சுருதிவல்லோரே. (169)

## வேறு.

தனந்தருமனையிலிப்போ சந்திரன்வலுத்துநிற்க
இனந்தருங்குடும்பந்தன்னோ டில்லறமோங்கிநிற்கும்
மனந்தருஞ்செம்மையாக மக்களும்மனைவியாகும்
கனந்தரும்பக்கம்ரெண்டு கஷ்டமாமனையதாமே. (170)

ஆனகேந்திரத்தில்புந்தி ஆதித்தன்பார்த்துநின்றான்
தானுமேவலுத்தாராகில் தன்மனைக்கதவுநாலு
வானுறுசங்கன்கூடில் மனைதனில்கிணறுமுண்டு
தானதுதூர்ந்ததென்று சாற்றினார்கந்தர்தானே. (171)

ஆனகேந்திரத்தில் செவ்வாய் அம்புலிஅணுகிநிற்க
தானுமேபெலத்துநின்றால் தளைத்திடும்மனையேகட்டி
வானுரவோங்கும்மாடி மக்களும்பூமியுண்டாம்
தேனெனும்மொழியாய்ராஜ யோகமுஞ்செப்பலாமே. (172)

காரியுங்குருவுங்கூடிக் கருதுதன்மனையில்நின்றால்
சீரியமனையில்நெண்டி செவிடுமைபாலருண்டாம்

காரியுங்குசனும்பாம்பும் கலந்திடில்பிடியால்சாவாம்
மாரியால்கண்டமென்று வாழ்த்தினார்கந்தர்தானே. (173)

பேசுங்குடும்பலக்கனத்தில் பிரியமுடனேசுபரிருக்க
நேசமனையில்தனம்புதையல் யிருக்குமென்றேபேசிவிடு
வாசமறவேமனைதனக்கு மைந்தனில்லையெனப்பேசு
நேசமறவேயின்னொருவன் கொள்வான்மனையைதப்பாமல் (174)

குறித்துநீமனையைப்பார்த்துக் குடிமனைதன்னிற்சென்று
விரித்துயின்னூலைப்பார்த்து விபரமாய்ராசிதன்னில்
மறுத்திடாச்சுபர்வீடாகில் அவனதுவீடாஞ்சொல்லு
நிறுத்திடுமனையோர்நல்ல நேசமாய்வாழ்வார்தாமே. (175)

வாழ்ந்திடுமுதயராசிக் கதிபதிவலுத்துநின்றால்
வாழ்ந்திடுங்குடும்பமெல்லாம் மனையதுகட்டியாகும்
வாழ்ந்தலக்கனத்தோன்றானும் மறைவிடமாரெட்டாகில்
வாழ்ந்துமேயிருக்கத்தானும் மனையதுகட்டமாட்டான். (176)

ஆனமதியுங்குருபுகரும் அமர்ந்துயெட்டுபனிரெண்டில்
தானும்பிலமாய்நின்றிடவே தாரமூன்றுசெய்தமனை
காணும்மனையில்புத்தெனவே காட்டுமனையில்கிணர்தூரும்
தானுமனைக்கிதென்புறத்தில் தாரம்ரெண்டுதப்பாதே. (177)

பிரியுஞ்செவ்வாய்கூடிப் பனிரெண்டெட்டில்சேர்ந்தால்
துரிதமாய்மனையிலிப்போ துன்பங்கள்மிகவுஞ்சொல்லு
விரிதலைசண்டைகுத்து விஷபயம்புத்துசொல்லு
பரிவுடன்பாவர்சேரில் புகலலாம்பிடியுங்கூட. (178)

## வேறு.

(வேறு) புந்திவலுக்கமனைநூறும் புகர்மால்குருவுக்குயெண்பதுவாம்
செந்திவலுக்கஅறுபதுவாம் சேருஞ்சனிக்கித்தொண்ணூறும்
ஐந்தாடரவுக்கெழுபதுவாம் மற்றோர்க்கெல்லாம்அற்பமதாம்
மைந்தாயிவர்கள்வலுவரிந்து மனைக்கிவயதுதான்சொல்லே. (179)

## வேறு.

(வேறு) நன்னியலக்கனத்தோனாட்சி நன்மையாம்அரசன்சாதி
வின்னமில்காரிபுந்தி விஷ்ணுவின்சாதியென்பார்

பொன்னனுங்கூடிநின்றால் பூணூல்க்காரன்சொல்லு
மின்னுறுவியாழன்புந்தி மேவிடவிஸ்வனுமே. (180)

விஸ்வனும்வியாழன்புந்தி விஷராகுங்கூடிநின்றால்
அஸ்வலக்கனத்தில்செவ்வாய் அல்லதுதனுமீனத்தில்
உச்சனும்பிருக்கசுவாமி உலாவியமனையாமென்பார்
நிச்சயங்கோவிலுள்ள நிலமெனவுரைத்தார்சந்தர். (181)

இப்படிராசிக்கோள்கள் யியல்பினையறிந்துமேலாய்
எப்படிதனிலேநின்று வீடுகளமையுஞ்சொல்லு
இப்படியாக்ஷியுச்ச யியல்பினையறிந்துநல்லாம்
அப்படிமனைக்கித்தானும் அன்புடன்பலனைச்சொல்லே. (182)

## வேறு.

பாவியிருக்கலக்கனத்தில் பாழுமனையேதான்கேட்பான்
தாவிமூன்றில்சுபரிருக்க தனக்குக்குடும்பமனைகேட்பான்
மேயிரண்டுநான்கதனில் வெய்யோனிருக்கவெந்தமனை
தாவிஅஞ்சில்சுபரிருக்கதவிற்கும் கெட்டிமனைகேட்பான் (183)

ஆறுமிடத்தில்பாவியுர ஆகாப்பாழுமனைகேட்பான்
சீராயிருந்தகுடிநாஸம் சேதமானமனைகேட்பான்
நேராயந்தமனைதனிலே நெடுங்காலங்கள்சத்துருவாம்
பாரேயிந்தமனைகாணும் பக்கங்கூடபாழ்சொல்லே. (184)

சொல்லேயேழில்சுபரிருக்க சுபமேகொடுக்கும்மனைதானும்
வல்லமுன்னால்சொத்துண்டாம் வலுவேகொடுக்குந்தப்பாது
நல்லயெட்டில்பாவருர நாசமாகும்மனைகட்டி
யெல்லாம்சித்தியுண்டாகி யெசமான்கூடப்போகுமதே. (185)

போமேசங்கைபுத்திரரும் பொருளுஞ்சேதமுண்டாகும்
தாமேயொன்பான்சுபரிருக்கத் தனக்குமனைதான்செல்வமுண்டாம்
ஆமேபூமிபூஷணங்கள் ஆடையுண்டாமெனப்பேசு
தாமேபத்தில்பாவியுறதனக்கு மனையேகட்டானே. (186)

கட்டானென்றுதான்பேசு கருமம்நாலுசெய்தவனும்
விட்டானலதுமனைகட்டி வெகுமனைதான்விற்பானும்

துஷ்டராசன் தன்னாலே சுகமேகெடுக்குந்தப்பாது
சட்டமாகத்தீராநோய் சனுதிவிலகுந்தப்பாது. (187)

தப்பாதுரையும்மதியெட்டில் சாமிசுபர்கள்தானிருக்க
மெப்பாய்செல்வமுண்டாகும் விளங்கும்புத்திரருண்டாகி
தப்பாதுரையும்மனைசேரும் சாரும்நஞ்சைபிஞ்சையுண்டாம்
மெப்பாய்வாழும்மனையென்றே மேவியுரைத்தார்கந்தருமே. (188)

எட்டுக்குடையோன்சனியுடனே யேழாமாதிசேர்ந்திடவே
திட்டமரவேகுடும்பாதி சேர்ந்துஇருக்கமனை தூங்கும்
வட்டமரவேவனவாசம் செய்யுமனையேதப்பாது
திட்டமரவேமனைமேற்கு தெய்வம்கிணறுஎனச்சாற்றே. (189)

குருவுமேசெவ்வாய்ராகு குறித்தஞ்சாம்ராசிநிற்க
பருவமாய்பாக்கியத்தில் பலத்துமேகண் ணுற்றாலும்
தெரியவேநாலுபத்து தெய்வங்கள்மனையிற்சொல்லு
அருமையாயிருந்தவீடு அதுமிகப்பாழதாமே. (190)

மன்னவனுதையத்தோனும் மருவிடயெட்டுபத்தில்
சொன்னவன்பலவானாகில் சுகமில்லைவடபுறம்பாழ்
துன்னியதாரமில்லை சனிகதிர்நீசம்பெற்றால்
வின்னமாய்கீழ்புரத்தில் விளைநிலம்அதிகமாமே. (191)

சாற்றுஇரண்டுமூன்றெட்டில் சனிசேய்ராகுநின்றாலும்
போற்றுமந்தமனை தனிலே போவானவனும்வனவாஸம்
மாற்றுஞ்சேயுங்கூடிடவே தாரமிரண்டுதப்பாது
மாற்றலாகும்மனையென்றே வகுத்தார்சுருதிவல்லோரே. (192)

## வேறு.

சொல்வேன்இன்னமொன்று நன்றாய்க்கேளீர்
சூரியனுஞ்சேயுடனே கூடிநின்றால்
வெல்லுமந்தமனையில் பெண்விதவையுண்டு
வேந்தனுடகுரிப்பறிந்து மொழியலாமே. (193)

கொஞ்சியேயெட்டுபத்தில் குருகுசன்கூடிநின்றால்
கிஞ்சுகமொழியினாலே கீழ்புறம்மனையேபாழாம்

வஞ்சகசனியேநின்றால் மாதுருநாசமாகும்
பஞ்சதாய்ப்போகுமென்று பகர்ந்தனர்தானே. (194)

பார்மகன்புதனுங்காரி பண்புடன்சேர்ந்தேழ்நிற்கப்
பாருமேமனைகிழக்கில் பணம்நாசமானவீடு
வீரியபுதனேநின்றால் விளங்காதமனையதாகும்
ஆரவேமனைக்கிநாளில் அவளுமேதட்டுவாணி. (195)

காணவேயுயிரோனேழில் கண்டிடப்புதனேசேரில்
வாணுருராகுபுந்தி வகையுடன்சேர்ந்தாராகில்
காணவேமனைகிழக்கில் கஷ்டமும்விபசாரங்கள்
ஆணொடுபெண்ணுமில்லை அம்மனைபாழதாமே. (196)

கொண்டிடுஞ்செவ்வாய்ராகு கூடியேயேழில்நிற்க
கண்டிடும்உலகோர்க்கெல்லாம் கடினமாய்வாழ்வதாகும்
வெண்டிடும்புதனேபார்க்க மேல்மனைக்காரன்சாவான்
சண்டியாய்தட்டுவாணி தானுமேயிருப்பாள்பாரே. (197)

## வேறு.

புந்திமதியிரவிகுருஒன்பானேரில்
பிதுர்இரண்டுபேர்களுமே யிருப்பார்சொல்லு
சந்ததிகள்மிகவாழ்ந்து தரணியாள்வான்
தயவாககாரிகுசன் பார்த்திட்டாலோ (198)

வெந்தமர்ந்துகட்டியதோர் வீடாஞ்சொல்லு
வெளிப்புரத்தில் குளிகிணர்களெதிரேநிற்கும்
பந்தயமாயிதையரிந்து திடமாய்சொல்லு
பாடினார்உலகத்தில் கந்தர்தானே. (199)

## வேறு.

வண்புறுமனைக்கித்தானும் வனவாசம்ரெண்டுபேரு
இன்பமாய்குடும்பம்விட்டு யினியவன்போயிருப்பன்
தன்புறுபெண்ணால்தானும் கெட்டதோர்மனையேபேசு
அன்புடன்கந்தர்தானும் ஆதியில்அறிந்துசொன்னார். (200)

ஆறுடன்ஒன்பான்றானும் அவரவர்வீட்டில்நிற்க
வேறுபட்டலைவன்வீட்டில் வேறொருகுடும்பந்தங்கும்

கூறுமேதெற்குவீட்டில் குடியதுஇல்லைபாரு
வீறியமானமன்னன் வேந்தனுல்கெட்டான்பாரே. (201)

## வேறு.

குடும்பத்தில்பாவர்நிற்குசனுமேகூடிநின்ருல்
நடுமந்தமனையுமுன்னுள் யீனர்கள்சொந்தமாகும்
நடுமனை தன்னில்கேணி நாடியமேற்குபுத்து
உடும்புமேமனையில்உண்டு உண்மையை அறிந்துசொல்லே. (202)

தின்றுரராகுகேது திரிகோணபதியில்நின்ருல்
நன்றுரமனைக்கிமேற்கு நாசமாம்மனைகள்தூங்கும்
அன்றுமேகீழ்புரத்தில் ஆலயங்கிணறுஞ்சொல்லு
நன்றுரமூவர்க்குத்தான் நன்மனைபாகஞ்சொல்லே. (203)

சேர்க்கையாயெட்டுநாலோ டேழினில்செவ்வாய்சேரில்
பார்க்கவேமனைக்குத்தெற்குப் பகர்வம்சம்அற்றுப்போகும்
ஏற்கவேபிள்ளையெல்லாம் யீனமாம்சாவுசொல்லு
தார்க்கமாய்பாவர்பார்க்க தான்மனைபாழதாமே. (204)

பூமனும்யேழில்நிற்கப் பொருந்தியமனை தான்மூன்று
காமனும்யெட்டில்நிற்க கட்டியமனையேநாலு
காமனும்ஆட்சிபெற்ருல் மனையது அஞ்சுசொல்லு
பூமனும்கேந்திரமேர பொருந்தியமனையுமாமே. (205)

## வேறு.

சூரியன்செவ்வாய்புந்தி சுக்கிரன்மன்னன்தானும்
கோரியலக்கனத்தில் கேந்திரகோணம்நிற்க
வீரியமனையதாகும் வேருெருகுற்றமில்லை
பாரியாள்மக்கள்செல்வம் பசுவுகள்மிகவுண்டாமே. (206)

வந்திடும்மனையாள்ரெண்டு வாஞ்சையாயொருத்திதானும்
தொந்தமாய்குடும்பம்விட்டுத் தூரியேபோவாள்பாரு
சுந்தரப்பெண்ணுற்கெட்ட தொந்தரையபிமானங்கள்
தந்திடும்மென்றுமுன்னே சண்முகனுரைத்தவாரே. (207)

காரியுஞ்செவ்வாய்தானும் கலந்துமேபத்தில்நின்ருல்
பாரியாள்தனக்குயிப்போ பாலரும்யில்லைசொல்லு

காரியகருமஞ்செய்ய காளையுமிவனுக்கில்லை
ஆரியமங்கைசாபத்தால் மைந்தருயில்லைப்பாரே. (208)

## வேறு.

சொல்லுங்காரிதனக்கேழில் சுங்கன்கூடிநின்றாலும்
வெல்லும்மனையில்முன்னாலே வேம்பும்புளியுமிதமாச்சு
நல்லசனியுங்கூடிநிற்க நன்றாய்வாழ்ந்தமனையாகும்
சொல்லுமனைக்கிவடபுறத்தில் சுத்தநாசமனையாமே. (209)

வந்திடும்மனையிலேதான் வனவாசம்ரெண்டுபேர்கள்
இந்தநற்குடும்பம்விட்டு யினியவன்போவான்பாரு
செந்திருப்பெண்ணினாலே சீர்கெட்டமனையதாகும்
முந்தியேகந்தர்தானும் முனிவருக்குறைத்தவாறே. (210)

## வேறு.

குரவர்மனையோன்விரயமதாக் கூடுமனைக்கித்தானேதான்
நிரையவீடுகட்டானும் நெடுங்காலங்கள்வாழானும்
உரையேதனங்கள்விரையமதாய் வுற்றார்பகையுந்தான்காட்டும்
பிறைபோலெழுந்தபெண்மயிலே பேதமுண்டாமெனப்பேசே(211)

தாருகவியத்தில்பாவிகளிருக்க சந்திரன்சகடமதாக
கூறிடுமனையில்குயவனுஞ்செட்டி யிருந்ததோர்மனையதுவாகும்
பார்புகழ்மதியும்வெள்ளியுங்கூட பரத்தையர்வீடதேயாகும்
சீருளகுருவுங்கேந்திரம்பெற்றால் செம்மையாய்வாழ்ந்தவீடாமே ()

## வேறு.

பகருமனையில்முன்னாலே பசுக்கள்கூடியிருந்தமனை
திகழும்மங்கைதன்னாலே சேர்ந்தமனையேதானுக்கும்
இகழும்மனையில்பேய்கருப்பு யிருக்குஞ்சூன்யந்தான்கூட
திகழுங்கேந்திரந்தானிருந்தால் செப்பும்பெண்ணால்குற்றமுண்டே()

குறையும்விரையம்பாவருற குடியேமனைக்கித்தான்போகான்
நிறையாய்செல்வம்பெறுகானும் நின்றேயிருக்ககாலமெலாம்
உரையேபொருள்கள்தெண்டமதாய் வூரார்கைவசமாகிவிடும்
பிரைபோல்வுற்றார்பகையுமது பெருகப்பெருகயோகமுளான் (214)

காணையிந்தராசிதன்னில் அதிபரிருக்கபலமனையாம்
தேனேசுபர்களிருந்தாக்கால் செம்மையாகமனைவாழும்

பானேபாவிராகுகேது வந்துயிருக்கமனைகட்டான்
தேனேயிந்தப்படியறிந்து மனைக்குப்பலன்கள்தான்சொல்லே. (215)

எண்ணியேமதியும்புந்தி யிருந்துமேபார்த்தாராகில்
நண்ணியேமனையில்முன்னால் நாதியும்மில்லைசொல்லு
தன்னுடன்மூணுரெண்டு பங்காளிமனையதாகும்
வன்னமாய்ரெண்டுபேரும் வம்மிஷம்நாஸம்சொல்லே. (216)

பேசும்அஞ்சோடொன்பானும் பேணியிருக்கத்தரித்திரமாம்
காசும்பணமும்விரையமதாம் கன்றுகாலிசேதமதாம்
வாசமனையாள்சஞ்சலங்கள் வருமையந்தம்மரணமதாம்
தாசிமனையில்மரணமென்று தக்கோருரைத்தசோதிடமே. (217)

ஆகியசெவ்வாய்புந்தி அம்புலிஅரவஞ்சேரில்
யூகமாய்பிறக்கும்பிள்ளை வுண்மையாய்மனையைவிட்டு
தேடியஒடமைஆஸ்தி இவையெலாம்லாபமென்று
சாகிடும்சொற்கமென்று சாத்தினர்கந்தர்தானே. (218)

பொன்னவன்ஜென்மத்தாதி பொருந்தியதிரிகோணமேவில்
வின்னமாயிருந்தாராகில் மேன்மனைக்காரன்தானும்
சொன்னதோர் வார்த்தையாலே சுருக்கினல்மாள்வதாக
பின்னுமோர்பார்வையாலே பழிகளும் ஆகுமொன்று. (219)

சொல்லவும் இன்னமும்கேளு சோமனோடிரவிபாம்பு
மெல்லவும் கூடிநின்றால் மேல்மனைக்காரனுக்கு
வல்லமைதாரம்நாலு மருவியேயிருப்பாளென்று
நல்லதோர் சகோதரம்நாலு நலமில்லையென்றுசொல்லே. (220)

ஒரைஒற்ற ராசிதன்னில் ஒடியேநாரிநிற்கில்
விரைத்தற்றபகையால் துன்பமேல்மனை தீயால்வேகும்
பகைத்துற்றகோளராளே பழிவரும்பாவஞ்செய்யும்
மதிசனிவயசில்தானும் மரணமொன்றுரைத்தார்கந்தர். (221)

## வேறு.

சுங்கனும்மதியும்ரெண்டுமேகூட சூரியன் ஆறலும்பார்க்க
அங்கவன்றனக்குமனையதுரெண்டு ஆதினுள்மனையதயில்லை
இங்கிவனுலேவந்ததம்மனையாம் அம்மனையிலவருமையுமடைந்தான்
பைங்கொளியேஇம்மனைக்கி மேற்குபொருந்தியகணேசனுண்டே. ()

குருவும்புதனுமதியுடனே கூடியிருக்கமனைவடக்கு
வருமேமனைகள்சேருமென வம்மிஷங்களத்தமனை
பெருகுஞ்செல்வயோகமுடன்பிள்ளைரெண்டு தென்புரமாம்
வருமேமனைக்கித்தென்புரத்தில் வனவாஸங்கள்போவானே. (223)

பாரினில்வியாழம்புந்தி பத்தில்சேய்நின்றாராகில்
கூறியநாலுபேர்கள்கொற்றவர் பிதர்க்களென்று
சீரியஒருகண்ஊணம் செப்பியவித்துவானும்
தேரியயோகவானும் தெளிந்துரைகந்தர்நூலால். (224)

சிரக்கவேயிருந்துகொண்டு சிரப்புடன்வாழ்வாயென்று
பிரிக்கவேவேண்டாமென்று பெரியதோர்குடும்பமாகி
தரைக்குள்ளபுத்திரயோகம் தன்மனையோகமாக
பெருக்கவேயிருக்குமென்று பேசினார்கந்தர்தானே. (225)

எண்ணியமதியும்புந்தி யிருந்துமேபார்ப்பாராகில்
நண்ணியமனையில்முன்னுள் நாதியும்யில்லைசொல்லு
தன்னுடன்மூன்றுரெண்டு பங்காளிமனையதாகும்
வின்னமாய்ரெண்டுபேரும் வங்கிஷம்நாசஞ்சொல்லே. (226)

சொல்லேகுடும்பலக்கினத்தில் சுங்கனிருக்கமனைவாழும்
வல்லஅரசன்சேர்ந்தாக்கால் மனைகள்பெருகும்அதிகமதாய்
நல்லாய்குடும்பம்வலுக்குமது நான்குதிசையும்விளைநிலமும்
நல்லபூமிதனம்நகைகள் சேருமென்றுபேசுவரே. (227)

பேசலாகும்மதிபுதனும் பின்னும்அரசன்சுக்கிரனும்
வாசமறவேகேந்திரத்தில் வலுத்துயிருக்கமனைதனக்கு
நேசமறவேபொக்கிஷங்கள் நிற்கும்கெட்டிஅகமாகும்
வாசமாகிமாடாடுமக்கள் வளமைபொருந்திவாழ்பவனும். (228)

கண்ணுரிடபர்ராசி கண்டஜென்மலக்கனமாய்
பண்ணுராவஞ்செவ்வாயும் பாவியுடனேநின்ருக்கால்
மன்னுயிருந்தமனேவேகும் மனையில்துன்பம்வியாதியுமாம்
சன்னுசியுமாய்தேசம்விட்டு தரித்திரத்தால்மாயுவனே. (229)

ஆரினிற்பாபர்புந்தி அம்புலிஅரவஞ்சேரில்
சீரிடவியாழம்வெள்ளி சேரவேலாபமேரில்
சூரியபுதனுமேழா மதிபனுங்குருவுஞ்சேர்ந்தால்
நாரிலாள்ராஜயோக மென்றுநீயரிந்துபேசே. (230)

மைந்தனும்ரவியும்மூன்றில் மன்னவர்பார்த்துநிற்க
சொந்தமாய்ஸ்திரிகள் யோகம்சுகமுடன்மிகுந்துச்சொல்லு
பந்தயமாகத்தானும் பரியாரிசேர்வாள்மங்கை
வெந்ததோர்மனையாமென்று விளம்பினர்கந்தர்தானே. (231)

செய்யவன்சோமன்பத்தில் சேர்ந்துமேபுதனும்நின்றால்
வையகம்பூமியோகம் வாழ்வதுமெத்தவாகும்
கையினில்மருவுண்டாகும் கருத்திடும்திரேகம்செவ்வாய்
பையவேநாலில்நிற்க பணக்கடனுகுவானே. (232)

கொஞ்சியேஅஞ்சேளொன்பான் குருசனியவரைக்கூடி
மிஞ்சியேயிடத்தில்பூமன் மீள்கதிர்அரவம்நிற்க
வஞ்சியேபாவர்நிற்க வாழ்மனைசொந்தமில்லை
மிஞ்சியேதேசம்விட்டு விற்பனையாகுமென்றே. (233)

வீரியன்மனையில்தானே வேண்டியபோரினாலே
அப்பனை அன்னைகூட அலைவனேதேசஞ்சுத்தி
சொர்ப்பொருள்யெமப்பிரட்டன் சொல்லுவான்விகடம்பொய்யும்
நற்பொருள்கொள்ளமாட்டான் நாடோடிப்பயலாமென்றே. (234)

சொல்லுநீமனத்தில்வஞ்சம் சொரிசிரங்குடையநோயான்
மெல்லியாள்விபசாரத்தால் மேன்மையைக்குலைப்பாள்தானும்
வல்லியாள்சின்னத்தாலே மரணமுமாவான்கண்டாய்
சொல்லியேசாவானென்று சோதிடவல்லோர்சொன்னர். (235)

கொஞ்சுங்காரியுடன்செவ்வாய் கூடியிருக்கமூன்றாரில்
தஞ்சமாவேலக்கினத்தோன் சார்ந்துஇருக்கஅம்மனையில்
துஞ்சுமனையில்சூனியங்கள் சோரபோகும்தப்பாது
வஞ்சியிரண்டுதாரமென வகுத்தார்மனைகாரன்தனக்கே. (236)

எட்டுக்குடையோன்சனியுடனே யேழாமாதிசேர்ந்திடவே
திட்டமரவேகுடும்பாதிசேர்ந்து இருக்கமனை தூங்கும்
வட்டமரவேவனவாசம் செய்யும்மனையேதப்பாது
திட்டமரவேமனைமேற்கு தெய்வம்கிணறுஎனச்சாற்றே. (237)

சொல்லுகிறேன்இன்னமொன்றுநன்றாய்க்கேளீர்
சுங்கனோடிரவிபுதன் கூடிநின்றால்
வெல்லுமந்தஎதுத்தமனைமூன்றுபாகம்
விதமானஒருவனுக்குதாரம்ரெண்டு
கள்ளியாம்யிருப்பாளோர்பெண்ணுதானும்
கருப்பதுவும்பிடித்துக்கொண்டாடுவாளாம்
வல்லமையால்கூறுகிறார்கந்தர்தானும்
வகுத்துரைத்தார்இம்மொழியை உலகினோற்கே. (238)

காணவேலக்கனத்தோன் பாம்புகூடி
கருதியேவாகனத்தில்நின்றாராகில்
பூணவேமனைதனிலே கிணறுமுண்டு
பொல்லாதசனியவரேகூடிநின்றால்
காணவேமாதாவும் மரணமாவாள்
கருமரோகியாயிருப்பா னென்றுசொல்லு
வீணிலேபோகுமப்பா காலியெல்லாம்
வேளாளர்குடியிருந்த மனையாம்சொல்லே. (239)

குருவும்புதனும்மதியுடனே கூடியிருக்கமனைவடக்கு
வருமேமனைகள்சேருமென வம்மிஷங்களத்தமனை
பெருகுஞ்செல்வயோகமுடன் பிள்ளைரெண்டுதென்புரமாம்
வருமேமனைக்கிதென்புரத்தில் வனவாஸங்கள்போவானே. (240)

பேசியமனையுண்டாகும் பெருக்கவே ஆஸ்தியுண்டாம்
வாசியுங்கன்றுகாலி மனையதுமெத்தசெய்வான்
கோசியுங்கிணறுவெட்டி குணமுடன்வாழ்வாரென்று
நாசியும்வாழ்வாரென்று நலமுடன்கந்தர்சொன்னர். (241)

இன்னமுஞ்சுருங்கச்சொல்வோம் யெட்டினில்குசனேநிற்க
திண்ணமாய்மனேவடக்கு செப்பியகெட்டியாகும்
வண்ணமாய்மனேக்குமேற்கு வருமையாய்கருப்புதெய்வம்
சொன்னதோர்நிருதிபக்கம் சூழ்மரம்பிசாசமாய்கை. (242)

ஆமிரவிசனிபுந்தி அல்லோரிருக்கப்பாவர்மனே
வேகமுடன்இருந்திடவே வீடுதோற்பான்தப்பாமல்
சாகுமனேயிலிருந்தோர்க்கு தரித்திரங்கள்வருகுமது
பாகுமனேயேபாழாகும் பரிந்துநாலாமிடமதனில். (243)

கொஞ்சியேபாவர்நண்ணி குருவுடனரவங்கூடி
வஞ்சியேசேர்ந்தாராகில் மனையதுவடபுறத்தில்
கொஞ்சியேகிணருண்டாகும் குருசேர்ந்துநின்றாராகில்
தஞ்சமாய்கீழ்புரத்தில் வாழ்மனேயென்றுசாத்தே. (244)

சொல்லியராகுசெவ்வாய் சூரியன்சனியுஞ்சேரில்
வல்லவர்கேந்திரத்தில் இருந்திடமனேக்குமேற்கே
சொல்லியதனவான்வீடு சுதனத்துபோவான்பேசு
வல்லிநாடோடிரெண்டு மங்கையும்பிருப்பான்காணே. (245)

காணும்லக்கனத்தில்செவ்வாய் காரியும்புதனுங்கூடி
மானுமன்னவனேயுச்சம் மருவியேநின்றாராகில்
வானுரமதியைச்சேர்ந்தால் மனேயெட்டில்நாஸ்தியாகும்
தானுருகீழோன்மேலோன் மனையதுயென்றுசாத்தே. (246)

சாத்துவான்சனியைக்கொண்டே சந்திரன்பாவியாகில்
யேத்தியேமாதுர்வர்க்கம் இருப்பதுரெண்டேசொல்லு
சாத்தியேஇருபத்தேழில் சந்ததியத்துப்போகும்
ஆஸ்தியேபோகுமென்று அரைந்தனர்கந்தர்தானே. (247)

மிக்கயிரண்டாமாதிபதி வெய்யோனுடனேசேர்ந்தாக்கால்
தக்கனுன்காமதிபதியும் சனியுங்கூடிநின்றாலும்
மக்கமனையில்உளமையவன் யிருந்தமனையாமெனப்பேசு
பக்கவலதுசெவிடனவன் யிருந்தான்மனையில்யெனச்சொல்லே. ()

## வேறு.

இனியவெள்ளிபுதன் சனிகூடியே
தனியமன்னவன் உச்சனாய்நின்றிட
தனியஅம்மனைமெத்தையுங்கட்டுவான்
கனிவரும்பாலர் யோகமுண்டாகுமே. (249)

## வேறு.

தக்கவன்யெட்டில்பாவிகளுடனே சத்துருவியத்தில்நின்றால்
மிக்கதோர்மனையில்புத்துமேமுளைக்கும் விடியாதமனையெனச்சொல்
பக்குவமாகும்மாடொடுமக்கள் பாக்கியம்குன்றிடும்சொல்லு
திக்குளதெல்லாம்அலைச்சலுமாகும் செப்பினார்கந்தனும்தானே. ()

கூருகவியத்தில்பாவிகளிருக்கக் குடிமனைசூனியஞ்சொல்லு
பாருகமுன்னால்பட்டுநூல்காரன் பார்த்ததோர்மனையெனச்சொல்லு
தாருகமனையில்சேருமேகிணறு சுவாமியுமிருந்ததோர்மனையாம்
வாருகமனையில்குடிவலுக்காது விளங்கிடாமனையெனச்சொல்லே. ()

பக்கத்தில்மூன்றில்அதிபதிதானும் பனிரெண்டுவியத்தல்நின்றால்
மிக்கதோர்மனையில்கன்னமேவைத்து விஷத்தினால்மாண்டதோர்ம
பக்குவமனைக்கிசெல்வங்கள்போகும் பாக்கியம்நாசமதாகும்[னையாம்
தக்கவன்மனைக்கிவேறொரு மனிதன்வருவதுயென்றுநீசொல்லு. ()

பொருந்துங்காரிரவிபுதனும் பொல்லார்வீட்டில்நின்றக்கால்
திருந்தமனைக்கிசெல்வங்களிலை செவ்வாய்கூடில்பாழ்மனையாம்
அருந்துமூன்றுநாலாறு அய்யனிருக்கமனைவிற்பான்
சிறந்தியிருப்பான்மனைவந்தோன் சிறக்கும்பூமிபலிக்குமென்னே. ()

தானேஅரசன்யிப்படியாத் தனித்துப்பாவிமனைநீசம்
மானேபாவியுடன்கூடில் வலுக்காமனையேபொட்டகண்
ஆனமுடங்கன்தானுண்டு வலதுசெவிடுதப்பாது
நாமேமனையில்நாடோடி யிருப்பானென்றுதான்பேசு. (254)

## வேறு.

பொருந்திடுங்காரியெட்டினிலிருக்க
பொக்கிஷம்மனைதனில்விரையம்
திருந்தியமேற்குகீழ்புரந்தன்னில்
செம்மையாய்வாளுமென்றுரைப்பாய்
அருந்திடுமனைக்கிதென்புரம்வடபால்
வாழாதமனையெனச்சொல்லு
திருத்தவேபலனையாவருமறிய
செப்பினார்கந்தர்தன்மொழியே. (255)

## வேறு.

சொல்லேநான்காமிடத்ததிபன் சுங்கன்கூடிவியத்திலுற
நல்லோர்பாராதிருக்க நாசம்தந்தைபரதேசம்
வெல்லும்மாதாக்கள்மரணம் விளங்கிச்சிரியபிதாவீட்டில்
கள்ளனாலேபல்லுடையும் மனவிதனக்கும்ரோகமென்னே. (256)

சொல்லும்நாலாமிடந்தனிலேசுங்கன்ரவியுஞ்சேர்ந்திடவே
நல்லசுகமும்போய்விடுமே நன்மையானபலனுமில்லை
பொல்லாக்கெவுளிதானுரைத்து பொருளுஞ்சேதமுண்டாகும்
யெல்லாப்பகையுஞ்சூரியனால்யிடைஞ்சலுண்டாமெனப்பேசு. (257)

பேசேயந்தமனைதனிலே பேய்கள்கருப்புகுடியிருக்கும்
நாசமாகும்மனையென்றே நாஸ்திசெய்யும்புத்திரரை
நேசமானோர்பகையாகும் நிஷ்டூரங்கள்தானாகும்
வாமுரவேகந்தருமே வகுத்தார்சுருதிவல்லோரே. (258)

வல்லோர்சொன்னமொழிப்படியே வளமாய்அறிந்துபலனுரைக்க
சொல்லேநான்காமிடந்தனிலே சுங்கன்ரவியுஞ்சேர்ந்திடவே

வல்லேயிரண்டுமூன்றினிலே வந்துயிருக்கலக்கனத்தில்
சொல்லேமேற்குதிசைதனிலே சொல்லுகருப்புஅம்மனுமே. (259)

அம்மனிருக்க மேல்புரத்தில் அரியபெருமாள்கோவிலுண்டு
செம்மையாகயெதுத்தமனே தீங்காயிருக்கும்நாசமதீ
இம்மைதனிலேபுத்திரரும் யியல்பாய்கருமம்புரிவனென
நன்மையாகபலனுரைத்தார் நலமாய்கந்தர்தானுமிதை. (260)

காணும்லக்கனத்தான்னீசம் கணக்கனும்ரவியுஞ்சேர்ந்து
வானுளோன்புந்திக்கேளில் மன்னனும்யிருந்தானுகில்
காணுரும்மனேக்கித்தெற்கே கர்ப்பத்தின்வீடேசொல்லு
நாணுரும்மனேக்கிமேற்கே நாதியில்லாதான்வீடே. (261)

அஞ்சேழில்பாவர்நிற்க அதிபதியதிலேநின்ருல்
துஞ்சுடன்மாமன்வீட்டில் சூனியம்இருக்கும்சொன்னேம்
கொஞ்சியதென்புரத்தில் குப்பையும்முருங்கைசொல்லு
தஞ்சமாய்வடபுறத்தில் சூனியம்இருக்கும்சாற்றே. (262)

சாத்தவேயின்னதென்று தானுமேசொல்லக்கேளும்
போத்தியேஅரவஞ்சேர்ந்து புந்தியுமிருக்குமாகில்
சாத்தியமனேக்குள்ளாக ஆண்சந்ததியத்துப்போகும்
போற்றியஇன்னம்யீரார் வருஷத்தில்பாழூவீடே. (263)

பாழாகும்மனேவளக்குபத்தாம் மனேயதுவேகுஞ்சொன்னேம்
நாளாகும்மனேயில்தானே தீப்படமாட்டாதென்றேம்
வாளாலேபெரியபட்டாப்போல் மடிவதுமனேயிலுள்ளோர்
தாளாகுமென்றுசொல்லி சாற்றினுர்கந்தர்தானே. (264)

போற்றியகேந்திரத்தில் புதன்கூடிரவியுஞ்சேரில்
சாத்தியமனேக்குள்ளாக ஆண்சந்ததிரெண்டுசொல்லு
போற்றியபாவர்சேரில் புத்துமேயிருக்கும்வீட்டில்
சாத்தியேவாழுமென்று சாத்தினுர்கந்தர்தானே. (265)

பொருந்தியகேந்திரத்தில் பாமர்கள்கூடித்தானும்
வருந்தியேயிருக்கத்தானும் வளங்கியமனேமேற்காகும்

திருந்தியசெல்வமுண்டாம் சேயிழைபெற்றுவாழ்வாள்
அருந்தவத்துறைதையத்தோரே பாடினூர்கந்தர்தானே. (266)

பத்தினில்காரிகூடி பனிமதிநீசமாக
ஒத்தநல்இரவிநிற்க ஒரேழில்பூமன்சேர
மற்றுள்ளோர்ஆறெட்டேர மரணமாங்குழவிமாதா
அஷ்டமன்ரவியுஞ்சேர ஆகாதுமனையேதோஷம். (267)

ஆகியபாவர்புந்தி அரவமும் இவரைச்சாரில்
ஏகியகுருவும்சேர்ந்தால் இருதாரம்மனைவியாகும்
வாகியமனையும்வேறும் மருமனைகட்டுவானும்
தாகியசெல்வம்போகும் தரித்திரந்தங்குமென்றே. (268)

காணும்லக்கனத்தில்தானும் கருமங்கள்செவ்வாய்சேர்ந்து
மானுவமான்பதனில்பத்தில் மதியுமேசார்ந்தாராகில்
வானுளோர்மூன்றும்பாட்டன் வாழ்ந்ததோர்மனையாஞ்சொல்லு
தானுமேதகப்பனேடே சகோதரம்மூன்றுசொல்லே. (269)

ஆக்ஷியாய்அரசன்நிற்க அம்புலிஇரவிசேரில்
தாக்ஷிஇல்லாமல்தானும் தாய்மனைவிளங்கும்நன்ருய்
வாச்சதோர்மனையாள்ரெண்டு மனைக்காரன்செல்வான்பேசு
காக்ஷியாய்மணமுண்டாக்கி கருத்துடன்வாழ்வானென்றே. (270)

வல்லவாநாலாமாகி வகையுடன் ஆட்சியாகில்
சொல்லுஉன்மனைக்குள்ளாக சூனியமிருக்குதிப்போ
வல்லவாபாராருகில் வடபுரம்ஈசான்யமூலை
நல்லவர்வடக்கிளென்று நாடியேரெடுக்கச்சொன்னேம். (271)

எடுக்கவேகிழமேலாக மனையதுஅளந்துநன்ருய்
திடுக்கஒன்பதிலேயேத்தி திரமுடன்செய்துநன்ருய்
படுக்கஈராருக்கீய்ந்து பகர்ந்ததுமிச்சந்தனில்
தடுக்கெனபாவினின்ற பங்கினிலெடுத்துக்கொள்ளே. (272)

கொஞ்சியபாகந்தன்னில் குருபுதன்வெள்ளிவெய்யோன்
தஞ்சமாயிருந்தாராறல் வடபுரங்கிணருஞ்சொல்லு

தஞ்சமாய்அதின்வடக்கு சாற்றுநீதீட்டுக்காடு
தஞ்சமாய்குப்பைவேம்பு சந்தியேயிருக்குந்தானே. (273)

சாரும்யீராராமிடத்ததிபன்சார்பாய் திரிகோணமேரிடவே
பேரும்பாவியுடன்கூட பேணில்கருமனும்கோணமேவ
சாரும்உதயம்பரவிநிற்க சாமிசிலையும்புத்திருக்கும்
வாரும்வடக்குசனிமூலே மலைக்குள்கிடக்கும்தப்பாது. (274)

பத்துநாலேழில்ஒன்பான் பனிரெண்டில்பாவிசேரில்
வித்தகன்கூடச்சேர்ந்தால் விளங்கர்தமனைவடக்கில்
கொத்துடன்அதின்வடக்கு குடிபோனமனையேசொல்லு
வித்தகன்சீமானுக விளங்குவான்அதின்வடக்கில். (275)

ஆகியசெவ்வாய்புந்தி அம்புலிஅரவம்சேர்ந்தால்
ஜாதகன்மனைக்கிக்கீழ்பால் சந்ததியில்லாவீடாம்
வாகியகிழக்குவீட்டான் மனைக்காரன்தாரம்ரெண்டு
போகியஅதின்கீழ்வீட்டான் பொல்லாததுஷ்டனுமே. (276)

இனிஐந்தாம்வீட்டான்தானு வம்மூசம்பங்காளிரெண்டாம்
இனியதோரொருவனுக்கு சந்ததிஇல்லைசொல்லு
தனியதோருருவனுக்கு ஆண்சந்ததிரெண்டுசொல்லு
இனியதாயொருபாகத்தின் மனையதுவடபுரம்பாழ். (277)

ஆகியவியாழம்வெள்ளி அம்புலிஅரவம்சேர்ந்தால்
தாகியமனைக்குள்ளாக தாரமும்ரெண்டுசொல்லு
ஏகியமேல்புரத்தில் எட்டடிதள்ளவேணும்
தாகியதனம்கில்லாது தனக்குமேநன்மையாகும். (278)

ஆகுங்குருவும்செவ்வாயும் அமர்ந்துஇருக்கப்பாவருடன்
வாகும்புதனுமேகூடில் மனைக்குத்தெற்குகோவில்வீடாம்
தாகும்செவ்வாய்சனிகூடில் சார்ந்ததெற்கேபாழ்மனையாம்
வாகும்அதற்குதென்புரத்தில் வீடும்கிணறும்வீதியுமே. (279)

வேந்தனும்மூன்றுநாலில் அல்லதுவிறையமேறி
சேர்ந்தாராறுவீட்டான் சேய்மதியவனும்சேர்ந்தால்

நேர்ந்தநோய்மனையுலுண்டாம் நீரினிற்குமிழிபோல
வாழ்ந்ததோர்மனையில்தானே வம்முசம்நாஸ்தியாகும். (280)

பொன்னேன்காரியுடன்சேயும் புகரோன்கூடிநின்றாலும்
மன்னனே அரசன்பாராதால் மனையும்பாழுயென்றுசொல்லு
பெண்ணேஏவல்சூனியங்கள் பிசகால்கெடுதிமிகவுண்டு
சொன்னேன்மொழிகள் தப்பாதுசூக்ஷமமுடனேகந்தனுமே. (281)

உரைத்திடுங்குடும்பந்தன்னை ஒன்பாதிரெண்டாமாதி
மரைப்பிலாலாபத்தாலும் வகுத்திடுங்குடும்பந்தன்னை
மரைப்பிலாசுபர்கள்நிற்க மனைவலுவாகச்சொல்லு
மரைப்பதுபாவிநிற்க மனைபங்கஞ்சொல்வாய்நீயே. (282)

எட்டாறுபனிரெண்டில்பாவர்களிருந்திடஏகுமேபிதாவுக்கரிட்டம்
சட்டமாய்சனியேழிடம்நிற்கிலோதாரம்ரெண்டும் தப்பாமல்செய்கு
வட்டமானமனையதுபக்கத்தில் வடபுரத்தினில்மனையதாம் [வான்
திட்டமாகஅதுக்குவடபுரம்திண்ணையுஞ்சுவர்படியெனசொல்லே. ()

சொல்லுஅந்தமனைக்கிமேல்புரம் சுத்தமுள்ளகிணரதுரெண்டுமே
சொல்லுமந்தமனைக்குதென்புரம் சோடியாகவேகோவிலும்சொல்லுநீ
சொல்லுஅந்தமனைக்கிகிழக்கினில்சொந்தமாய்ஆறுதாரமேசெய்தமனை
சொல்லுஇந்தப்படிமனைநிச்சயம் சுகமுடன்செவ்வாய்எட்டிலிருந்திட.

## வேறு.

என்றனர்கணிதவல்லோர் இவருக்குகருமஞ்செய்ய
நின்றதோர்பாலரில்லை நிச்சயம்நானும்சொன்னேன்
சென்றனர்காரியத்தில் செவ்வாயுங்கூடிநின்றால்
வண்டணிமங்கைசாபம் மைந்தனும்இல்லைசொல்லே. (285)

புகழ்பெருபுதன்றனக்கு பூங்கொடிசாதிசொல்லு
திகழ்குருஅரசன்தெய்வம் சிவமதக்காரனாகும்
புகழ்சுங்கன்வணிகனென்றும் போற்றியவர்த்தகஞ்சொல்
திகழ்சனிதொழிலுக்காரன் திகள்ரெணம்வியாதிசொல்லே. (286)

சொல்லவும்பூமிதன்னில் சூக்ஷமமாய்சல்லியங்கள்
நல்லதோர்நாற்பத்தொன்பான் நடுமனைவீடுபோட்டு

சொல்லவேலெட்சம்நூறு யோசனைமட்டும்பூமி
வல்லவனுனகந்தன் வகையுடன் சொல்லுகின்றேன். (287)

ஏற்கையாய்அடிஅளந்து எட்டினில் பெருக்கிமைந்தா
ஏற்கையாய்ரெண்டுங்கூட்டி இருபத்துயேழுக்கீய
ஏற்கையால் மீந்தலக்கம் இருப்பதுயேழுவைக்க
ஏற்கையாய்கந்தர்தானும் இயம்பியகருத்தீதாகும். (288)

வைத்திடுகாலுமுக்கால் வகையுடன் கணக்குவந்தால்
வைத்திட்டமனைக்குத்தீம்பு வம்மிசம்மனைக்கியில்லை
வைத்திடநொண்டிவூமை மைந்தர்கள்பிரப்புண்டாகும்
வைத்திடசிலகாலத்தில் வம்மிசம்அத்துப்போமே. (289)

தந்திடுமுழுமையான நாள்களேசம்பத்தாகும்
தந்திடும்பூமிதன்னை தானியம்செட்டுலாபம்
தந்திடும்பால்தனங்கள் தனக்குள்ளசம்பத்தெல்லாம்
தந்திடவரங்கள்பெற்ற சண்முகருரைத்தார்பாரே. (290)

நாள்விட்டராசிமுதலாய் கிரகமும்மூன்றதாகும்
கீழ்லெக்கம்மூன்றதாகும் திரநாள்கள்ரெண்டதாகும்
கீழுள்ளலக்கனந்தான் சரமுதல்ஒட்டநன்றாய்
சாலவேஆறுபோட்டு சடுதியில்பலன்கள்சொல்லே. (291)

பலனதுசொல்லக்கேளு பாவிகள்மூன்றுநாலில்
நலமுடன்இருந்தாராகில் நாசம்அம்மனையேயாகா
பெலமுடன்சுபர்கள்கூடி பின்முழுநாள்கள்வந்தால்
நலமதுராஜயோகம் நல்மனைகட்டலாமே. (292)

கட்டலாம்மூன்றுமிடத்தில் கடுநிதியோர்கள்நின்றால்
திட்டமாய்கிட்டப்பாவர் சேர்ந்ததோர்மனையைக்கண்டால்
சட்டமாய்கணக்கில் கால்ரைமுக்கால்சாரிலோமனையேபாழாம்
தொட்டவனுடனேதூரதேசங்கள் தனக்குப்போவான். (293)

போவதுநாலாம்வீதி புந்தியும்ரெண்டில்நிற்க
தாவதுகுறையேயானல் லக்கமும்யில்லாவிட்டால்

ஆவதுவீண்நாள்தன்னில் கட்டியேகுடியிருந்தால்
ஆவதுகுடும்பம்நாஸ்தி ஆகுமென்றுரைத்தார்கந்தர் (294)

நண்ணியஐந்தாம்வீட்டில் நல்லவர்யிருக்கயோகம்
எண்ணியபாவர்நிற்க இருபுரம்வின்னமாகும்
திண்ணமாய்சுபர்கள்நிற்க செல்வமேமனைகுடுக்கும்
பின்னரும்மன்னன்நின்றால் பேசலாம்ராஜயோகம். (295)

நன்றுகேள்ஆறும்வீட்டில் நல்லவர்பாவர்சேர்ந்து
வென்றுரஇருந்தாராகில் விர்த்தியாம்மனையேசொல்லு
சென்றுரக்காரிரெண்டில் சேர்ந்திடசூனியங்கள்
இன்றுமேசனியிருந்த இடமதுதடங்கல்சொல்லே. (296)

சொல்லலாஞ்சசியேநின்ற இடத்தினில்பாவர்நிற்க
வல்லவர்பாவர்பார்த்தால் அல்லதுசேர்ந்திட்டாலும்
சொல்லலாம்பாவியாலே தூர்ந்திடுங்கிணருஞ்சொல்லு
நல்லவர்வலுத்துநின்றால் நன்மையாய்விளங்குஞ்சொல்லே. (297)

சூரியகடகம்ரெண்டாம் வீட்டினில்இருந்தலெக்கம்
சூரியஐந்தாம்வீட்டில் குருபுதன்சசியும்சுங்கன்
மாரியேரெண்டுபேரும் வலுத்தொருவீட்டில்நின்றால்
சூரியலெக்கம்பார்த்து குடிமனைகட்டனன்றே. (298)

கட்டலாம்லக்கநாவில் கடினதீயர்கள்நில்லாமல்
திட்டமாகயிருக்கநூறு வருஷமேவிளங்குஞ்சொல்லு
அஷ்டலெட்சுமியும்வாசம் அணுகிடும்மனையில்தானும்
இஷ்டமாய்பூகோளத்தில் இயம்பினர்கந்தர்தானே. (299)

நாலதுமூலைதன்னில் நல்சுங்கன்அஷ்டலெக்கம்
மேலதாயிருந்தாராகில் விளங்கிடாமனையேசொல்லு
நாலதுமூலைபக்கம் நல்சுபர்கூடிநின்றால்
மேலதாய்ஆண்டுநூறு விளங்கிடும்மனையேசொல்லு. (300)

இப்படியிருக்கத்தானும் இனிநடுவீடுதன்னில்
செப்பினேனும்ரெண்டுவீடு சேர்சுபர்பாவிசமனுய்

மெய்ப்படஇருந்தாராகில் விர்த்திக்குஜன்னூராண்டு
செப்பினேம்குருவும்பாவி சேர்ந்திடமேன்மையாமே. (301)

இருசெவ்வாயிருந்தவீதி இருபுரம்பாழுசொல்லு
இருசனியிருந்தவீதி இருந்திடுஞ்சூனியங்கள்
இருரவியிருந்தவீதி இடிபடுமனையேபாழு
இருபாம்புநின்றவீதி இரங்காதுவலுத்துஒங்கும். (302)

ஒங்கியரெண்டுகேது ஒர்வீதிதன்னில்நின்றால்
தூங்கியரெண்டுபக்கந் துலங்காதமனையேசொல்லு
தாங்கியசனியுங்கூடில் தலைச்சனும்சாடிசொல்லு
பாங்கியேகுளியும்கிணர்கள் பட்டிசேர்பாழாகுஞ்சொல்லே. (303)

அமர்ந்திடும்ரவியேநின்ற அவர்விந்துலெக்கத்தோன்பான்
அமர்ந்திடும்நாலுஅப்பன் அவனுக்குயென்றுசொல்லு
அமர்ந்திடும்ஐந்திடத்தால் அவனுடபிள்ளைசொல்லு
அமர்ந்திடும்அதற்குயேழில் அவன்களஸ்திரம்அறிந்துசொல்லே. ()

சொல்லலாம்சசியேநின்ற சொல்மாதாநாலாய்ச்சொல்லு
சொல்லலாம்நாலுநாலில் சொல்மாதுர்சகோதரங்கள்
சொல்லலாம்அதுவேயெட்டு ஆயிசுயென்றுசொல்லு
சொல்லலாம்பாதிபெண்ணு சரிபாதிஆணதாமே. (305)

கந்தராரூடம் - முதற்பாகம் முற்றும்.

---

தா. பொன்னுசாமி பிள்ளை,
புஸ்தக வியாபாரம்,
தெப்பகுளம் போஸ்டு, திருச்சினப்பள்ளி.

உ

சிவமயம்.

# கூபசாஸ்திரம்.

அரியயன்தேடிக்காணா அரனிருமைந்தனை
கரிமுகன்குகன்றன்பாதங் கருணையாய்ப்போற்றிசெய்து
பரிவுடன்பாரிலுள்ள கூபமேபாடவேண்டிக்
குருபதஞ்சென்னிலைவத்துக் கூறுவேனெவர்க்குமின்னூல்.

திரண்டதோர்தேங்காய்தன்னைச் சிக்கெனக்குறக்குவைக்கில்
தரம்பெரிதூற்றுண்டென்று தானதுநோக்கிநிற்கும்
பிரண்டுதானப்புரம்போய்தேங்காய் பிரிந்துதான்நோக்குமாகில்
மருண்டிடுமுற்றுமில்லை வலியதாங்கூகந்தானே.

கூகிரகோழிதன்னைக் குருகவேவிரல்தரித்தால்
சோரைதான்மிகுதியாகில் தோன்றிடும்பெருகிவெள்ளம்.
சூளவேசிதரியோடில் சுடர்விளநேரஞ்சென்றால்
ஆளமுந்தணியவெட்டி லதினுடன்சில்லூற்றாமே.

தற்சுசெய்யு முகூர்த்தம்.

மிருகசீரணங்-கேட்டை-மூலம்-பூராடம்-உத்திராடம்-திருவோணம்-புணர்தம் - பூசம்-கும்பம்-இடபம் - துலாம் - கடகம் - மீனம் மகரம்-இதில்-சந்திரன்-வெள்ளி வியாழன் இந்தகிரக உதையங்களும் இந்த நட்சத்திர முகூர்த்தங்கொண்டு கிணறுயெடுக்கில் பெருநீருண்டாம்.

உதயாரூடத்திற்கு-4-7-10-மிடம் சுபக்கிரகங்கள் நிற்கில்பெருநீருண்டும் ஆற்றுநீர் வருத்திற்கு-7-ம் ராசிப்பலன் சொல்வது வியாழன் உச்சமாகில்-சாண்முழத்தில் நீருண்டென்பது.

கவிப்புராசி சரராசியாகில் மேலூற்றென்பது திரரரசியாகில் ழூற்றென்பது உபையராசியாகில் நடுஊற்றென்பது.

## கவி.

நீரில்லாராசிதானும் நீருடைக்கோளுமாகில்
ஏர்நீர்மேலதென்க வேரவைபிரியக்காணில்
பாரிலாளத்தில்நீராம் அல்லவைபரியக்காணில்
பெருகுநீரில்லையென்று பேசினர்பெரியோர்தானே.

## நூல்.

கவி. நீர்காட்டும்நிலமதனைப் பன்னிருகூறிட்டு
நிகழ்கின்றராசிதன்னைப் தரமமேல்வைத்து
வார்காட்டும்வன்முலையாய் வலமிடமாகவந்த
மதிவெள்ளியெவ்விடத்தே யெடுக்கிலவ்விடத்தேயேகில்
பார்கார்ட்டும்பாம்பாகில் பழங்கிணறதாகும்
பெருகுமதிபுந்தி குருப்பேராருகும்
மூர்காட்டுங்கதிரவனுஞ் சேய்காரிதானும்
ரொளியணையாய் நீரற்பமுளதெனவுமுரையே.

(இ-ள்) கிணறு குத்தவேண்டிய தலத்தை பன்னிரண்டு கூறு செய்து நிகழ்கின்றராசியைப் பிர்மத்தானத்திலே வைத்து வலமிடமாக வெண்ணினல் சந்திரன்வெள்ளி நின்றதிக்கிலே கிணறுவெட்டினல் பெருநீருண்டாம், இராகுகேதுவந்தால் பழங்கிணறு சந்திரன் புதன்-வியாழன்-நல்லதண்ணீரென்பது, ஆதித்தன் சனி-செவ்வாய் வந்தவிடம் நீரற்பமாம்.

## நிலமறிவது.

முல்லைக்கரிசல் முழுப்பாலைதான்வெற்புச்
செல்லக்குறிஞ்சி சிவப்பாகும்—வல்ல
மருதம்பெருமணலாம் வானெய்தல்குங்குமமாங்
கருதியறிவதற்கே காண்.

(இ-ள்) நிலமானது முல்லைநிலம் குறிஞ்சிநிலம் மருதநிலம் நெய்தல் நிலம் பாலைநிலமென்று ஐவகைப்படும்.

இந்த ஐந்துவகைநிலத்திலும் மண்ணனது.

| | | |
|---|---|---|
| பால்நாரியமண் — வேதியன் | } | இப்படி நான்கு வகைப்படும். |
| பழநாரியமண் — க்ஷத்திரியன் | | |
| நீர்நாரியமண் — வைசியன் | | |
| நிணம்நாரியமண் — சூத்திரன் | | |

இவற்றுள் முல்லைநிலமானது எங்குள்ளமண்ணும் கருமண்ணும் எழும்பி கிடக்கும்.

இதில் மண்கண்டம் 7-சாண்-செம்பாரு-3-சாண் மஞ்சள்பாரும் வெள்ளைப்பாரும் தண்ணீரும்-8-சாண் கொப்பரைக்கல்லும் நாகவரிக்கல்லும்-9-சாண் முற்றுக்கல்லும் பொன்னிரக்கல்லும் விரவிக்கிடக்கும் கருமண்-1-சாண் அதில் தண்ணீர்வரும் இதுவெட்டு 32-சாண்.

குறிஞ்சிநிலமானது பாலையில் செவ்வலும் கரிசலுமாய்க்கிடக்கும் இதில் மண்கண்டம்-6-சாண்-கருஞ்சாலிமண்-2-சாண், வெள்ளைப்பாரும் நீரும்-8-சாண் கொப்பரைக்கல்லு-3-சாண்-கருஞ்சாலமண்-4-சாண். அப்புப்பாரும் நாகவரிக்கல்லும்-9-சாண், இது வெட்டு 32-சாண்.

குறிஞ்சிநிலமானது பருமண்ணும் செங்கோலருகும் கடலாடிபீளைமாரிப்பருவத்தில் வரண்டுகிடக்கும், வெட்டுப்பருவத்தில் தளைந்து கிடக்கும் களரெழும்பி கிடக்கும், இதில் மண்கண்டம் 5-சாண் வெள்ளைப்பாரும் நீரும் 8-சாண் அம்புப்பாரும் பொன்னிறக்கல்லும் மேல் விரவிக்கிடக்கும், இதுவெட்டு 32-சாண்.

நெய்தல் நிலத்திற்கு கதிர்மண்ணைத் தெள்ளிப்பார்த்தால் வெள்ளியும் பொன்னும்போலே கிடக்கும், மண்கண்டம்-8-சாண் வெள்ளைப்பாரும் நீரும் 8-சாண், நரிமுகக்கல்லும் சிப்பியும் உளரியும் 16-சாண், இதுவெட்டு 32-சாண்.

பாலைநிலத்திற்கு மண்கண்டம் 4-சாண் கலச்சால் 8-சாண் கொக்குக்கல் 6-சாண், விரிபிறைக்கலச்சால் காக்காய்ப்பொன் சிலவரிக்கல் 6-சாண், சாரக்கல் 6-சாண் இதுவெட்டு 30-சாண்.

வெட்டைப்பருவத்தில் குளிர்ந்திருக்கும் யிடத்தில் பெருநீருண்டு இவ்விடத்தில் கிணறுவெட்டினல் மூன்று முழத்தில் நீர் தோன்றும் 4 முழத்தில் நீர்பெரிதாம்.

## கெங்கையின் விபரம்.

மஞ்செனகெங்கை செளுவகெங்கை சலசலகெங்கை சர்ப்பகெங்கை மச்சகெங்கை கிஷ்கெங்கை துரகெங்கை பஞ்சவன்னி பூவி

லும் மெல்லிய சப்தசமுத்திரம் கும்பசமுத்திரம் பாலேசமுத்திரம் முல்லேசமுத்திரம் ஆக உத்தமகெங்கை 11.

உப்புத்தண்ணீர் உவர்தண்ணீர், சவம்புதண்ணீர், துவப்பு தண்ணீர், கடுப்புதண்ணீர், எரிப்புதண்ணீர், கருந்தண்ணீர், கனத்த தண்ணீர், சிவந்ததண்ணீர், கற்காந்தல்தண்ணீர், ஆகமத்திப கெங்கை 10.

யமுனே, கெங்கை, கோதாவரி, கிருஷ்ணு, காவேரி, இந்த 5-ம் பூமியில் கண்டதில்லே பாதாளங்கீறியோடுமென்பது.

## கெங்கையின் தலேமுறையறிவது.

கெங்காதேவிமகள் புற்பகெங்காதேவி அவள்மகள் பகீரதி அவள்மகள் ஆனந்தபகீரதி அவள்மகள் மாதவபகீரதி அவள்மகள் சுக்கிலசுணுதேவி அவள்மகள் சலங்கை ஆக 7.

கூர்மலெட்சுமிமகள் பத்ரகாளி அவள்மகள் கோவிந்தலட்சுமி அவள்மகள் நல்லகெங்காதேவி அவள்மகள் பூமாதேவி அவள்மகள் வலபாருதி பொம்மாகிருமலு ஆக தலேமுறை 14.

## பார்நிறப்பாரின் பிறப்பு.

பார்நிறம் மன்னீராயிரம், அதன்கீழே ஆமை அதன்கீசே சேடன் அந்த சேடனுக்குங்கீழே அறுகால்பீடம் அதன்கீழே மகா மேருவின்முடி அதன்கீழே விஷ்ணுதாபரம் அதன்கீழே உத்திர மணிவிளக்கு அதன்கீழே சிவமயம், ஆனந்தம், அந்தத்திக்குவிஜயம் யெட்டிலும் கௌதமாமுனி தபசுபண்ணியிருப்பார் அதுக்கப்பால் பாசிக்கடல் அதுக்கப்பால் பங்கயர்க்கடல் அதுக்கப்பால் பாவை விரிவாகத் திருப்பாற்கடல் விலாசம் இப்படிக்கொத்ததலம் எழுபது லட்சம் கோடி யோசனே விரிவும் அகலமும் நீளமுமுடைய பிரமா ணத்தில் ஆயிரம் பணுமுடியுடைய ஆதிசேஷன் அணேயாயிருப்பன் அதின்பேரில் ஆதி திருநாராயணசுவாமி பள்ளிகொண்டருளிஆனே வாகனத்தின் பேரில் யெழுந்தருளியிருப்பார், இனி இவ்விடங்களி லுள்ள பாரின்நிறமாவது.

## பார்விவரம்.

மாங்கொட்டைப்பார் சுக்கான்பார் கரும்பார் குங்குமப்பார் குங்குமச்செம்பார் செம்பாச்செவ்வாளேப்பார் சாணுங்கிப்பார் சாலப்பார் உப்புப்பார் உவற்பார் சுண்ணும்புப்பார் காந்தமனேப்பார் அரனேப்பார் உருளேப்பார் உருக்குப்பார் அடுக்குப்பார் அரிசிப்பார் கழுதை விட்டைப்பார் கடுவாய் நிறப்பார் வேங்கைவரிப்பார் கு

பைப்பார் காக்காய்ப்பார் பொன்னிறப்பார் பஞ்சிப்பார் சுருணை குண்டுப்பார் படர்ந்தபார் அப்புப்பார் பாலாடைப்பார் சொரிமணல் பார் புத்துப்பார் செம்புநிறப்பார் வோசைப்பார் நாகப்பார் கீரிப் பார் நீர்ப்பார் திருநீற்றுப்பார் மலைப்பிளவை வயிரக்கல்லு இரும் பாம்புபூச்சி காட்டுக்கல் களிநிறப்பார் களிப்பாலைப்பார் சிலாரப்பார் மந்தப்பார் அழலப்பார் சுருட்டுப்பார் தண்ணீரப்பார் தாரைப்பார் பாக்குப்பார் - சிரட்டைவயிரப்பார் - சோத்துப்பார் - சொரிப்பார் புளியம்பூப்பார்-புளியங்கொண்டைப்பார் - பொங்குப்பார் - பரித்தி விதைப்பார் - காலிப்பார் - சீனிப்பார் - சிப்புப்பார் - ஆமைப் பார் - கோரோசனைப்பார் - குங்குலியப்பார் - தவிட்டுப்பார் - கிளி நிறப்பார் - தாரைப்பார் - மயில்நிறப்பார் - குதிரை முகப்பார்- அளுங்குப்பார் - கண்டாங்கிப்பார் - அமனைப்பார் - காளைப்பார்- சாணைப்பார் - பச்சைநிறப்பார் - விரால்நிறப்பார் - தவளைநிறப்பார்- சூடாமணிப்பார் - நிலப்பார் - பஞ்சவர்ணப்பார் - பாளைப்பார்- கிடாப்பார் - வெள்ளைப்பார் - இப்படிக்கொத்த - பன்னீராயிரம் நிறமென்ற பாரிலூடே ஆயிரம்பணமுடியுடைய ஆதிசேடனுசியில் வருகிற ஜலம் பறந்து நீர்க்குமென்பது.

கீழாத்தில் வருகிறது - சங்குசிற்பி - கல்லூசி - ஆரால்மீன்- தேளிவிலாங்கு - கூளி - கனி - நண்டு - தப்பளை - தேரை - நீர்ப் பாம்பு - செவ்வால் - அரணை - செம்பாம்பு - யிருக்கும் நாணல் வீத்திருக்கும் - சம்பு வளர்ந்திருக்கும் - மூட்டைப்பாசிவளர்ந்திருக் கும் - காயக்காரென்று மண்ணுமிருக்கும் - தலைமண்டிருக்கும் - நந்திப்பிள்ளையாரிருக்கும் மண்சோரிருக்கும் - இதுகீழாத்துச்சல்லி யங்களாக விருக்குமென்பது.

## நிலக்கரு.

தெற்பைப்புல்லு வெண்புல்லு பஞ்சாருதிப்புல்லு செங்கோல ருகு பொடுதலை சம்பு சிறுபுள்ளடி ஆல் அரசு தென்பாலை புங்கு நொச்சி பலா நீர்ப்புலா சிறுபீளை அறுகு தும்பை துளசிசாரணை நாயுருவிக்கூட்டம் நத்தைசூரி நீர்த்துள்ளி பெருபிலந்தை ஒற்றை ஆவாறை யெருக்கலை மாவிலிங்கக்கூட்டம் இதுகள் நிற்குமிடத்தில் கிணறுவெட்டுவது நீர்பெருகுமென்பது.

## புத்தின் விபரம்.

ஊமைப்புத்து ரெட்டைப்புத்து பிண்டிப்புத்து கொண்டைப் புத்து அய்வணைப்புத்து அறுகோணப்புத்து புதுமண்செய்த புத்து பொந்தப்புத்து மாப்பிள்ளைப்புத்து பலகண்புத்து செம்புத்து வெண்புத்து வெப்பாலைப்புத்து நீர்ப்புத்து குங்குமப்புத்து பஞ்சா ...ிப்புத்து ஆக புத்துவகை 14.

## நிலத்துள்ள மண்ணின் விபரம்.

செம்மண் சிவலைமண் செவ்வாளைமண் பொன்மண் வெள்ளி மண் செம்புமண் இரும்புமண் ஈயமண் உப்புமண் உவர்மண் உவர் களிமண் கரிசள்மண் பாளைமண் வெய்பாலைமண் வெப்புமண் அணல் மண் புத்துமண் வடிமண் குங்குமமண் செம்பாலைமண் பொட்ட லுப்புமண் அட்டுப்புமண் ஒட்டுப்புமண் வளையலுப்புமண் கரியுப்பு மண் கல்லுப்புமண் அறிமணல்மண் திரிமணல்மண் சொரிமணல் மண் இருக்குத்துமண் சாம்பல்மண் உவர்க்கரிசல்மண் உவர்பாலை மண் காவிமண் கொப்புமண் இதுசளிலே புத்தில் துளசி பிரண் டை இந்துதும்பை பூலா ஆவரை இலந்தை புங்கு தெற்பை தளப்ப பாலை, துத்தி அறுகு பொடுதலை கரிப்சான் மாவிலிங்கு இவை ஒன் ருகிலும் புத்தில் நிற்கில் ஊற்றுதலங் குறிப்பு உண்டென்பது.

அய்வணைப்புத்தில் 3 முழம்வெட்ட சாணீளத்தில் கெண்டைக்கால் பருமத்தில் செம்பாம்பு தோன்றும் அதற்கு பொங்கலிட்டு பொலிகொடுத்து பால்வார்த்து புதைக்கவும் அதன்கீழ் 7 முழம் வெட்ட பெருநீராம் அதில் ஒரு தேரை ஒருபிடிசோறும் தண்ணீரு மிருச்கும் அம்மன் பூசைபண்ணவும் ஒருமுழத்தின்கீழ் பெருநீருண்டு.

அறுகோணப்புத்தில் அஞ்சுமுழத்தில் ஜலதாரை தோன்றும் அதில் ஒடைதோன்றும், ஒருமுழத்தின்கீழ் வெண்கல்லுதோன் றும் உடைபடும் மூன்று முழத்தில் பெருநீருண்டு அந்த ஊத்தில் விருல்மீன்வரும் அதைக்கொல்லாமல்விடவும்.

பலகண்புத்தில் நாலுமுழத்தில் நாகந்தோன்றும் அதின்கீழ் 7 முழத்தில் நீர்ப்பாம்புதோன்றும் சுனைவிழும் இளமண்ணேடிருக் கும் அதன்கீழ் ஒருமுழத்தில்வெட்ட பெருவெள்ளமுண்டு வட மேல் மூலையில் குமுளி ஊற்றுதோன்றும்.

பொங்தப்புத்தில்-5-முழத்தில் கசுவுதோன்றும். 7 முழத்தில் செவ்வாலரணையிருக்கும் அதன்கீழ் தலைமண்டையோடிருக்கும் ஒரு கண்புத்து யேழுமுழத்திலே ஒடைதோன்றும் ஊமைப்புத்து மூன்று முழத்தில் நீர் தோன்றும்.

வெள்ளெலி உடும்பு தேளு ஒந்தி தேரை பலநாள்முறை சஞ் சரிக்கிற இடத்தில் கிணறுவெட்டினல் ஒருகைமுழத்தில் நாலு திசையிலும் நீர்தோன்றும்.

தான்றியநாணலின் கீழே நொச்சியும் நிற்குமிடத்தில் கிணறு வெட்டினல் 3-முழத்திலே நீர்தோன்றும் 4 முழத்திலே ஒரு செம் பாம்பு தோன்றும் அந்தகிணத்து நீரைக்குடித்தால் விஷகடி எலி கடி தீரும்.

கூபசாஸ்திரம் முற்றிற்று.

ஓம் சரஹணபவ சண்முகதேவாயநம:

# முக்கிய கவனிப்பு.

கீழ்கண்ட புஸ்தகமும் இன்னும் இதர புஸ்தகங்கள் தேவையானவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதினல் வி. பி. தபால் மூலியமாய் அனுப்பப்படும். தபால் சார்ஜ் பிரத்தியேகம்

| | ரூ. | அ |
|---|---|---|
| சுந்தரசேகரம் முதல் பாகம் | 0 | 12 |
| ஷை 2-ம்பாகம் தியாகராஜ சேகரம் | 0 | 12 |
| ஷை 3-ம்பாகம் தியாகராஜ சோதிட ஆனந்தக்களிப்பு | 0 | 12 |
| புலிப்பாணி சோதிடம் 300 | 0 | 12 |
| கந்தர் ஆரூடம் 300 | 0 | 8 |
| சோதிடமாலை எசல் | 0 | 4 |
| காக்கையர் நூல் | 0 | 4 |
| காதகலங்காரம் மூலம் | 0 | 12 |
| ஷை மூலமும் உரையும் | 1 | 8 |
| ஹோரா சாஸ்திரம் | 1 | 0 |
| கௌசிக சிந்தாமணி 1-வது | 0 | 12 |
| ஷை 2-ம் பாகம் தர்க்கம் | 1 | 4 |
| ஷை 3-ம் பாகம் | 1 | 0 |
| ஷை 3-பாகம் சேர்ந்தது | 3 | 0 |
| சர்வ கினவின் பலன் | 0 | 4 |
| களவுகாணும் சாஸ்திரம் | 0 | 4 |
| சோதிட நூலாதாரம் | 0 | 4 |
| கணித முருகசேகரம் | 1 | 0 |
| மணிமந்திர வைத்தியசேகரம் | 1 | 0 |
| அனுபோக ஜாதக ரகசியம் | 0 | 12 |
| வீமகவி | 0 | 10 |
| கந்தர் நாடி | 0 | 10 |
| புஜண்டர் நாடி | 0 | 5 |
| சோதிடக் களஞ்சியம் | 0 | 8 |
| ஷை மூலமும் உரையும் | 1 | 8 |
| குமாரசாமியம் | 1 | 8 |
| வீமேசுர உள்ளமுடையான் | 1 | 4 |
| சூ ாமணியுள்ளமுடையான் | 1 | 0 |
| மங்களேஸ்வரியம் | 2 | 0 |
| சாதக சிந்தாமணி | 1 | 8 |
| ஜெயமுனி வாக்கியம் | 0 | 4 |
| மரண கண்டிகை | 0 | 6 |
| பாராசாரியம் | 0 | 12 |
| சோதிட பாலசிட்சை | 0 | 6 |
| சோதிட பாலபாடம | 0 | 12 |
| சோதிட அரிச்சுவடி | 0 | 3 |
| ஷை 2-ம் பாகம் | 0 | 3 |
| ஷை 3 ம் பாகம் | 0 | 3 |
| ஷை 4-ம் பாகம் | 0 | 3 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| திசாபுத்தி அந்தர பலன் | 1 | 4 |
| மணிகண்ட கேரளம் | 0 | 8 |
| ஷை மூலம் உரை | 1 | 0 |
| தய்ய கேரளம் | 0 | 6 |
| சாதக கணிர்தாமிர்தம் | 0 | 4 |
| சோதிட கிரக சிந்தாமணி என்னும் பெரிய வருஷாதி நூல் | 0 | 8 |
| கோட்சார சிந்தாமணி | 0 | 12 |
| சோதிட சில்லரைக் கோர்வை | 1 | 8 |
| தாண்டவ மாலை | 0 | 2 |
| சந்திர காவியம் | 0 | 2 |
| அகஸ்தியர் பஞ்சபட்சி மூலம் | 0 | 8 |
| ஷை மூலம் உரையும் | 1 | 0 |
| ரோமரிஷி பஞ்சபட்சி மூலம் | 0 | 12 |
| ஷை மூலமும் உரையும் | 1 | 4 |
| போகர் பஞ்சபட்சி உரை | 0 | 14 |
| பஞ்சபட்சி ரத்தினம் | 0 | 12 |
| கமலமுனிரேகை மூலம் உரை | 1 | 0 |
| இராமதேவர்ரேகைமூலம்உரை | 1 | 0 |
| ஆண்பெண் ரேகை | 0 | 8 |
| சினேந்திர மாலை | 0 | 12 |
| ஆரூட அலங்காரம் | 1 | 0 |
| அஷ்டதிக்கு ஆரூடம் | 0 | 12 |
| அனுபோக பிரச்னை ஆரூடம் | 0 | 8 |
| அருக்கன்நிலைகெவுளிசாஸ்திரம் | 0 | 4 |
| சோதிட சடலகாராதி | 0 | 10 |
| சோதிட பேரகராதி | 2 | 0 |
| சிற்பநூல் பொக்கிஷம் | 1 | 0 |
| சர்வார்த்த சிற்ப சிந்தாமணி | 1 | 8 |
| மனையடி சாஸ்திரம் | 0 | 4 |
| சிற்பசாஸ்திர களஞ்சியம் | 2 | 0 |
| மனை விதி விளக்கம் | 0 | 4 |
| உத்தேச காரியபலன் | 0 | 4 |
| ஜீவன விஷயபலன் | 0 | 2 |
| சோதிட பிரஞ்ஞான தீபிகை | 2 | 8 |
| சப்தரிஷி வாக்கியம் | 3 | 0 |
| சுகர் நாடி | 1 | 4 |
| சந்திர நாடி | 0 | 12 |
| ஈஸ்வர நாடி 7-காண்டம் | 5 | [illegible] |
| சோதிட பிரகாசம் | 1 | [illegible] |
| நந்தி வாக்கியம் | [illegible] | [illegible] |

எமது மேல்விலாசம்:—தா. பொன்னுசாமி பிள்ளை
புக் ஷாப், தேப்பக்குளம் போஸ்டு, திருச்சி